GOKULAM

கோகுலம்

ரூ.6/-

ஜூன் 2004



இந்தியாவில் ஓர் அண்டார்டிகா!



All Brain Development courses in an umbrella
Senior Soroban
Mastering Soroban
Soroban Kids
Soroban Flash
Brain Gym
Neuro Linguistic Programme
Mind & Memory Programme
Brainy Child
SEMAS
"Explores the Child's Talent"
SEMAS 's
Latest Japanese Abacus Education now in more than 100 places in Tamilnadu more than 4 states in India
Now SEMAS Students are not only Brilliants! Healthy too!
Trade/Franchisee enquiries are welcome from all over India
C.O. : 545, 14th Street, 4th Sector, K.K.Nagar, Chennai - 600 078.
Ph. 247 22550/22505 Fax : 248 01083 www.semasindia.com



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

ஜூன் 2004 மலர் : 22 இதழ் : 5

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

செய்தி நேரம்

செவ்வாயில் குடியேற்றம்!

அடுத்த 30 ஆண்டுகளில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் குடியேறுவார்கள். சந்திரனில் முக்கிய விண்வெளி தொழிற்சாலைகள் அமையும் என்று குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தற்போது உலக மக்கள் தொகை 600 கோடி. இது 800 கோடியாக அதிகரிக்கும் போது தாதுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். அவற்றை வேறு கிரகங்களில் இருந்து நாம் பெற வேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.



• அப்துல்கலாம்



• வாஜ்பாய்



• ஐஸ்வர்யா ராய்

நூறு பிரபலங்கள்

உலகின் மிகப் பிரபலமான 100 பேர்களை லண்டனில் இருந்து வெளியாகும் டைம் பத்திரிகை தேர்வு செய்துள்ளது. இதில் பிரபலமான தலைவர்கள், புரட்சியாளர்கள், சிந்தனையாளர்கள், முன்னோடிகள், கலைஞர்கள் என ஐந்து பகுதியாகப் பிரித்து தலா 20 பேரின் பட்டியலை வெளியிட்டுள்ளது. தலைவர்கள் பட்டியலில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், சீன அதிபர் ஹூ ஜிந்தாவோ, ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அன்னன், பில்கேட்ஸ் வரிசையில் பிரதமர் வாஜ்பாயும் இடம் பெற்றுள்ளார். புரட்சியாளர்களில் ஒசாமா பின்லேடன் பெயரும் உள்ளது. முன்னோடிகள் பட்டியலில் நெல்சன் மண்டேலா, ஆங் சான் சூகி, தலாய் லாமா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கலைஞர்கள் பட்டியலில் ஐஸ்வர்யா ராய் இடம் பிடித்திருக்கிறார்.

ரயில் விபத்து

வட கொரியாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற இரண்டு சரக்கு ரயில்கள் நேருக்கு நேர் மோதி பயங்கரமாக வெடித்துச் சிதறின. இந்தக் கோர விபத்தில் சுற்றியுள்ள பல பகுதிகளில் தீ பரவியது. இதில் மூன்றாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஆட்சி மாற்றம்!

ஈராக்கில் நாளுக்கு நாள் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. ஈராக்கியர்களிடம் ஜூன் 30ந் தேதி அமெரிக்கா நிர்வாகத்தை ஒப்படைக்க இருக்கிறது. ''ஆட்சியை ஒப்படைத்த பின் நடக்கும் வன்முறைகளை ஈராக் படையினரால் மட்டும் கட்டுப்படுத்த இயலாது. எனவே அமெரிக்கப் படைகள் தங்கியிருக்க வேண்டியது அவசியம்'' என ஈராக்கின் நிர்வாக கவுன்சிலின் தலைவர் பால் பிரீமர் கூறியுள்ளார்.

பத்தும் பறந்து போச்சு!

ஜோக்ஸ் கார்னர்

டாக்டர்: உங்க உணவிலே வைட்டமின் ஈ சேர்த்துக்கணும்!

அவர்: சரி டாக்டர்! பலாப்பழத்தைக் காட்டினா ஈக்கள் வரும். அதிலே 'வைட்டமின் ஈ'யைத் தனியா எப்படி கண்டு பிடிப்பது?

- கு. அருணாசலம்,
தென்காசி





''எடிசன் மட்டும் மின்சாரத்தைக் கண்டுபிடிக்கலன்னா இந்நேரம் என்னாகியிருக்கும்?''

''நாமெல்லாம் மெழுகுவர்த்தி வெளிச்சத்துல டீ.வி பாத்துக்கிட்டிருப்போம்!''

- எம்.ஏ. ரிஸ்னா பரகத்,
இலங்கை

ஆசிரியர்: ஒன்பதுக்கு அடுத்து பத்துன்னு சொல்லாம... பதினொண்ணுன்னு சொல்றியே, ஏண்டா?

மாணவன்: இது பசிநேரம். பசி வந்திடப் 'பத்தும்' பறந்து போச்சு சார்!

- அனுராதா ராஜப்பா,
திண்டுக்கல்







முருங்கை மரப்

மிக உயரமான மரங்கள், குறுமரங்கள், செடி கொடிகள் யாவும் அடர்ந்த அழகிய மலையடிவார வனம் அது.

எங்கும் பலவிதமான பூக்கள் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தன. காட்டுக் குருவிகளின் கீச்சொலிகள் தூரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தன.

முருகன், கணேசன், காசி மூவரும் அந்த வனத்தின் ஒற்றையடிப் பாதை வழியாகப் பேசிக் கொண்டே நடந்தனர். ஏதோ ஓர் ஓசை கேட்டு மூவரும் நின்றனர். அடுத்திருந்த ஒற்றையடிப் பாதையில் 'ஓநாய்' ஒன்று சென்று கொண்டிருந்தது. அதன் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது அவர்களுக்கு.

"இது என்னப்பா நரியா, செந்நாயா?" மெல்ல கேட்டான் கணேசன்.

"ஏதாவது இருக்கட்டும் பேசாமல் வா" என்றான் முருகன்.

"நான் அதை வெரட்டட்டா?" என்ற காசி ஒரு கல்லெடுத்து அதன் மீது எறிந்தான். காலருகில் கல் விழுந்ததும் திரும்பிப் பார்த்த ஓநாய் இவர்களை நோக்கி ஓடி வந்தது. மூவரும் அருகில் இருந்த பாறையில் ஏறிக் கொண்டனர்.

பாறையைப் பல தடவை சுற்றி வந்த ஓநாய் கீழே படுத்தவாறே இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. சிறிது நேரங் கழித்து ஓநாய் பார்வையை வேறு பக்கம் திருப்பியதும் பின்புறம் குதித்து ஓடினர்.

ஓடிய சத்தத்தில் விழித்துக் கொண்ட ஓநாய் பின்னால் துரத்திக் கொண்டே வந்தது.

ஓநாயிடம் பிடிபட்டால் 'லபக்' கென்று கடித்த இடத்தில் அப்படியே சதையைப் பிடித்து இழுத்துவிடும். ஓநாய்க்கும் அவர்களுக்குமான இடைவெளி குறைந்து கொண்டு வந்தது.

அப்போது எதிர்பாராதவிதமாக தொப்பென்ற சத்தம். ஓடிக் கொண்டிருந்த அவர்கள் திரும்பிப் பார்த்தனர். ஓநாயும் அந்த அதிர்ச்சியில் 'டக்' என்று நின்றது. மரத்திலிருந்து யாரோ குதித்தனர். யார் அது?

அவன்தான் நீலன். ஆதிவாசிச் சிறுவன். கோவணம் மட்டுமே ஆடையாகத் தரித்திருந்தான்.

"நீலா" என்று மகிழ்ச்சியில் கூவினர் மூவரும்.

"சத்தம் போடாமல் தூரப் போங்கள்" என்று சைகை காட்டிய நீலன், ஓநாயைப் பார்த்தான். அது இவன் மேல் பாயத் தயாரானது.

கீழே கிடந்த ஒரு கம்பை எடுத்து சுழற்ற ஆரம்பித்தான். கம்பு காற்றைக் கிழித்துச் சுழலும் வேகத்தில் 'விர் விர்' என்று சத்தம் எழுந்தது. நீலன் ஓநாயை நோக்கி கம்பைச் சுழற்றியவாறே நடந்தான். அது நாலுகால் பாய்ச்சலில் எடுத்தது ஓட்டம்.



"நல்லவேளை, நீ வரலேன்னா எங்க கதி அதோ கதிதான்".

"சாமி, நான் இந்த மரத்துல பழம்

பேய்!

✣ கொ.மா.கோதண்டம் ✣



பறிச்சுக்கிட்டு இருந்தேன். சத்தம் கேட்டுப் பார்த்தா நீங்க...''

''இவன் அது மேல கல் எறிஞ்சுட்டான் நீலா. அதான் அது எங்களை விரட்ட ஆரம்பிச்சுது.''

''சாமி, காட்டுக்குள்ள வந்துட்டா எந்தப் பிராணிக்கும் தொந்தரவு தரக் கூடாது. அப்புறம் நமக்குத்தான் ஆபத்து.''

''சரி சாமி, இனிமேல் அப்படி செய்யாதீங்க, எதுக்கு வந்தீங்க இன்னிக்கு?''

''நீலா, உன்னைப் பார்க்கத்தான் வந்தோம்'' என்றான் கணேசன்.

''என்ன வெவரம் சொல்லுங்க?''

''நீலா, இந்தப் பையன் பேரு காசி. இவங்க தெருவுல ஒரு பையன் உடம்பு சரியில்லாம இருக்கான். அவனைப் பார்க்க உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகலாமுன்னு வந்தோம்.''

''அவரோட உடம்புக்கு என்ன சொல்லுங்க?''

''எங்க ஊரு கடைசில ஒரு முருங்கை மரம் இருக்கு. அதுக்குக் கொஞ்ச தூரம் கழிச்சு சுடுகாடு. இந்த மரத்துல பேய் இருக்குதுன்னு ஊர்ல எல்லாருக்கும் பயம். கதை, கதையாக பேசிக்கிட்டு இருப்பாங்க. அந்தப் பையன் ஒருநாள் சாயந்தரம், அந்தப் பக்கம் வந்திருக்கான், கல் தடுக்கி விழுந்துட்டான். பேய்தான் தள்ளி விட்டிருச்சுன்னு எல்லாரும் சொல்ல, காய்ச்சல் வந்து, இப்ப மூளையும் குழம்பிப் போய், ஏதேதோ பேசுறான். டாக்டர் கிட்ட ஊசி போட்டும் பலனில்லை. அதான் உங்கிட்ட ஆலோசனை கேட்க வந்திருக்கோம்'' என்று முருகன் விவரமாகக் கூறினான்.


''டாக்டர் என்ன சொல்லுறாங்க?'' - நீலன்

''புத்தி தடுமாறிடுச்சு, சரியாக கொஞ்ச நாளாகுமுன்னு டாக்டர் சொன்னாராம்'' முருகேசன் கூறினான்.

''நீலா, பேயடிச்சவங்களுக்கு உங்க தாத்தா மந்திரிச்சா சரியாப் போயிரும்னு சொல்லியிருக்கே. அது ஞாபகம் வந்தது. உங்க தாத்தாவைக் கூட்டிட்டுப் போகலாமுன்னு வந்தோம்.''

''சரி சாமி, இப்ப நான் உங்ககூட வரேன். நான் பார்த்துட்டு நாளைக்கு எங்க தாத்தாவைக் கூட்டிட்டு வரேன்.''

''அப்ப உடனே புறப்படுவோமா?''



உலகிலேயே அதிகக் கட்டணம் வசூலிக்கும் ஹோட்டல் பஹாமஸ் தீவிலுள்ள 'கிறிஸ்டல் ஹோட்டல்'தான். தன் வாடிக்கையாளர் ஒருநாள் தங்குவதற்குக் கட்டணமாக 9 லட்சம் ரூபாய் வசூலிக்கிறது.

மணியின் வீட்டுக்குச் சென்றனர். மணியின் அம்மாவும், அப்பாவும் நீலனை வியப்புடன் பார்த்தனர். "அம்மா, உள்ளே கூட்டிப் போய் நீலனுக்கு மணியைக் காட்டுங்க" என்றான் முருகன்.

படுத்திருந்த மணியின் தலை, கை, கால்களைத் தடவி விட்டான் நீலன். அவன் பாதையில் வரும்போது பறித்து வைத்திருந்த பச்சிலைச்சாற்றை எடுத்து, அந்த அம்மாவிடம் தந்து "இதை இடித்து சாறெடுத்து தலையில தேய்ச்சி குளிப்பாட்டுங்க. இது எரிக்கல மரத்து இலைகள். இதை வீட்டுக்கு முன்னாடி சொருகி வைங்க. பேய் இங்க வராது" என்றான் கணேசனிடம்.

"மணி என்ன பேசுறான்?" என்று கேட்டான் நீலன்.

காசி ஜன்னலைத் திறந்து, "அதோ பாரு நீலா, முருங்க மரம். அதுல காய் காய்ச்சிருக்கிலே. ரெண்டு காய் மட்டும் பச்சையா இருக்கு பாரு" என்றான்.

"அந்த ரெண்டு பச்சைக்காயும் காஞ்சசன்னக்கி, நான் செத்துப் போயிருவேன்னு இவன் அடிக்கடி இதைப் பார்த்து சொல்லிட்டிருக்கான்." நீலன் ஜன்னல் வழியாகப் பார்த்தான்.

"ஏன் முத்தினப்பறம் காய்களை மரத்தில் வைச்சிருக்காங்க?" நீலன் கேட்டான்.

"அது அடுத்த வீட்டு மரம், விதைகளை எடுத்து மருந்து செய்ய அப்படி விட்டிருக்காங்க" அந்த அம்மா சொன்னார்.

நீலன் அந்த அம்மாவிடம் ஏதோ கேட்டு வாங்கி, பொடி பண்ணித் தரச் சொன்னான். தூங்கியவன் எழுந்தவுடன் தேன்விட்டு சாப்பிடத் தரச் சொல்லி விட்டு, அந்த முருங்கை மரத்தின் பக்கம் மாணவர்களுடன் சென்றான்.

"பக்கத்துல எங்கேயாவது முருங்கை மரம் இருந்தால் பச்சைக் காய்களை பறிச்சுட்டு வாங்க. நூலில் கட்டி இந்த மரத்துல தொங்க விடணும்." மூவரும் சென்று காய்களைக் கொண்டு வந்து மரத்தில் கட்டினர்.

"மணி எழுந்ததும் கூப்பிடச் சொல்லுங்க" என்றான் நீலன்.

"மணி எந்திருச்சுட்டான்" என்று அவன் அப்பா சொன்னதும், அவர்கள் அங்கு சென்றார்கள். முருகன் காதில் நீலன் ஏதோ சொன்னான். திரும்பிய மணி "இவன் யாரு?" என்றான் மெல்ல.

"இவன் மந்திரவாதி. உன்னைப் பார்க்க வந்திருக்கான்" என்றான் காசி.

ஜன்னல் வழியாகப் பார்த்த மணி "அந்த மரத்துல காய்ந்த முருங்கக்கா எப்படி பச்சையானது?" என்று கேட்டான்.

"மணி, இந்த மரத்துல கடைசிக்காய் காஞ்சு போனதும் நான் செத்துடுவேன்னு நீ சொன்னயில்லே. இந்த மந்திரவாதி கிட்டே சொன்னேன். உடனே மந்திரம் ஓதி பேயை விரட்டிட்டு காய்ந்த முருங்கை காயை பச்சையாகுன்னு சொன்னார். எல்லாம் பச்சையா மாறிருச்சு. இனிமேல் உனக்கு ஒண்ணும் ஆகாது மணி" என்று கூறினான்.

உடனே மெல்ல எழுந்து உட்கார்ந்தான் மணி. அவன் எழுந்து உட்கார்ந்ததைப் பார்த்தவுடன் அவன் அம்மா, அப்பா மகிழ்ச்சியில் அழுதே விட்டனர்.

நீலனைத் தழுவிக் கொண்டு "எங்க புள்ளையைக் காப்பாத்தின தெய்வம் நீ" என்று உணர்ச்சி வசப்பட்டனர்.

"தம்பி, உனக்கு எவ்வளவு ரூபா வேணும்?" மணியின் அப்பா கேட்டார்.


"சாமி, எனக்கு ரூபா எதுவும் வேணாம். ஒருநாள் அய்யனார் கோவிலுக்கு வந்து எங்க சனங்களுக்குச் சோறு போடுங்க, அது போதும்" என்றான் நீலன்.



சுட்டெரிக்கும் வெயிலில் தொலைக்காட்சியில் பனிப் பிரதேசங்களையும், பனி விளையாட்டுகளையும் பார்க்கும்போது ஏக்கமாக இருக்கும். பனிகளால் சூழப்பட்ட ஸ்விட்சர்லாந்துக்கோ, அண்டார்டிக் பிரதேசத்துக்கோ நாம் செல்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை! பனிப் பிரதேசத்தைத் தேடி வெளிநாடுகளுக்கு எங்கும் செல்ல வேண்டாம்! நம் நாட்டிலேயே இருக்கிறது. அதுதான் ஹைதராபாத் நகரில் இருக்கும் 'ஸ்நோ வேர்ல்ட்' என்ற பொழுதுபோக்கு பூங்கா.

'ஸ்நோ வேர்ல்ட்' உண்மையிலேயே பனி நிறைந்த உலகம். இது இந்தியாவிலேயே முதல் பனி உலகம். ஆசியாவில் ஜப்பான், கொரியா மற்றும் ஹைதராபாத்தில் மட்டுமே இருக்கிறது. OPMLC என்ற தனியார் நிறுவனம்தான் இந்தப் பனி உலகத்தை உருவாக்கி, சுற்றுலாத்துறைக்குக் கொடுத்திருக்கிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏகப்பட்ட சுற்றுலா பயணிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளனர்.

2 முதல் 4½ அடி வரை உயரம் உள்ளவர்களுக்கு 200 ரூபாயும் 4½ அடிக்கு மேல் இருப்பவர்களுக்கு 250 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இக்கட்டணத்தைச் செலுத்தி உள்ளே சென்றால் ஒரு மணி நேரம் பனி உலகத்தில் நீங்கள் ஜாலியாக இருக்கலாம்!



கட்டணம் செலுத்தப்பட்டவுடன் ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, பனி உலகத்துக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர். குளிரைத் தாங்கு

சிநேகம்




வதற்கு ஸ்பெஷல் கோட் கொடுப்பார்கள். அதை மாட்டிக் கொண்டு, உள்ளே செல்ல வேண்டும்.

உள்ளே நுழைந்ததும் அண்டார்டிக் பிரதேசத்தில் நுழைந்துவிட்டது போல் குளிர் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. சற்று நேரத்தில் குளிர் சற்று நடுக்கத்தைத் தர ஆரம்பிக்கிறது. கோட்டின் அவசியம் நமக்குப் புரிகிறது. பனி உலகத்தின் வெப்ப நிலை - 5°C. எங்கும் வெண்மையான பனி. ஆங்காங்கு பெங்குவின், பனிக்கரடி, வால்ரஸ், பனி மனிதன், பனி வீடு என்று செட் செய்து வைத்திருக்கிறார்கள். 17,000 சதுர அடியில் அமைந்திருக்கும் இப்பனி உலகம் முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரால் உருவாக்கப்படுகிறது. இந்தப் பனி எப்பொழுதும் கரைந்து விடாமல் அப்படியே பாதுகாத்து வைக்கப்படுகிறது.

இது மட்டுமின்றி பனி விளையாட்டுகளும் உள்ளன. பனிச்சறுக்கு, ஐஸ் பம்பர் கார், பனியை எறிந்து விளையாடும் பனிப் போர் ஆகியவையும் இங்கு உள்ளன. இத்தனை அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கும் பனி உலகத்தில் ஒரு மணி நேரம் போவதே தெரியாது. மணி அடித்து நம்மை வெளியே அனுப்பும்போது சந்தோஷம் மனதை நிறைக்கிறது.

வித்தியாசமான அனுபவத்தை விரும்புகிறவர்கள் அவசியம் இந்தப் பனி உலகத்தை ஒருமுறை தரிசிக்க வேண்டும்!





அட்டையில் :
ஸ்ருதி, சுமேகா
அட்டை மற்றும் படங்கள்:
மணிகண்டன்



இந்தியாவில் ஓர் அண்டார்டிகா!


பட்டு நூல்கள் எங்கே?
கதை:
ஆர். சாரதா
படம்:
மகேஸ்
ஹாசன் பட்டு நூல் வியாபாரி. நசீம் வண்டியோட்டி. இருவரும் நண்பர்கள். ஒருநாள் -
நசீம், நான் பாக்தாத் போகலாமென்று இருந்தேன். திடீரென உடல் நிலை சரியில்லை.
நான் இன்று கிளம்பறேன். உன் பட்டு நூல்களை எடுத்துச் செல்லட்டுமா?
சரி. நான் இரண்டு நாட்களில் அங்கு வருவேன். நீ பத்திரமாக இதை வைத்திரு. மிக விலையுயர்ந்த பட்டு நூல்கள்.
நீ வைத்தியம் பார்த்து விட்டு வா. பத்திரமாக வைத்திருக்கிறேன்.
பாக்தாத்தை அடைந்த நசீம் பட்டு நூல்களை நல்ல விலைக்கு விற்று, பெரும் பணம் ஈட்டினான்.
தாடி எடுத்துவிட்டு, ஆடம்பர உடைகளை அணிந்து கொண்டான்.
ஒருவாரம் கழித்து ஹாசன் நசீமைத் தேடி வந்தான்.
ஐயா, இங்கே நசீம் என்று...
நசீம் என்று யாரும் இல்லை. நீ கிளம்பு.



தாடி எடுத்து ஆடம்பர உடை அணிந்தால் தெரியாதா? நசீம் என் பட்டு நூல்களைக் கொடு.
நான் பெரிய கம்பளி வியாபாரி. உன்னை எனக்குத் தெரியாது.
இருவரும் நீதிபதியிடம் சென்றனர்.
ஹாசன் இவர் கம்பளி வியாபாரி என்கிறார். தீர்ப்பு வழங்க இயலாது. கம்பளி வியாபாரியே போகலாம்.
நன்றி ஐயா.
நசீம் பத்தடி நடந்தான். அப்போது நீதிபதி -
வண்டியோட்டியே, இங்கே வா.
ம். எதற்கு?
நசீம், நீ செய்தது மிகப்பெரிய குற்றம். பட்டு நூல் விற்ற பணத்தை ஹாசனிடம் கொடு. இரண்டு மாத சிறை தண்டனையும் உண்டு.
என்னை மன்னியுங்கள்.
நன்றி ஐயா.



குப்பைகளை என்ன செய்வது?

குப்பை வண்டி வரும் சத்தம் கேட்டது. விளையாடிக் கொண்டிருந்த பூமாவை அழைத்தாள் அம்மா.

"பூமா, குப்பையை வண்டியில் கொட்டி விட்டு வா. நான் வேலையா இருக்கேன்."

வேகமாக குப்பைக் கூடையை எடுத்துக் கொண்டு வாசலுக்குப் போனாள் பூமா .

"பாப்பா, நாளையிலிருந்து குப்பையை இப்படி கொண்டு வந்து கொடுக்கக் கூடாது" என்றார் குப்பை வண்டிக்காரர்.

"குப்பைக்குக் கூட சட்டம் வந்துருக்கா? ம்... சரி, எப்படி கொடுக்கறது?"

"இந்தக் குப்பைகளைத் தனித் தனியாகப் பிரிச்சுக் கொடுக்கணும்..."

"பிரிக்கணுமா? எப்படி?"

"சொல்றேன். காய்கறிகள், பழங்கள், கீரைகள் போன்ற கழிவுகளை உங்க வீட்டு மரம், செடி போன்ற தாவரங்களுக்கு உரமாகப் பயன்படுத்திக்கலாம்."

"சரி. தோட்டம் இல்லாதவங்க என்ன பண்ணுவாங்க?"

"இந்தக் குப்பைகளைத் தனியாகக் கொடுக்கணும். அதை மட்க வைத்து உரமாக்கிவிடுவோம். அப்புறம் பிளாஸ்டிக், பாலித்தீன் கவர்கள், பேப்பர் போன்ற கழிவுகள் மறு சுழற்சி மூலம் உபயோகப் படுத்தலாம். எனவே அவற்றைத் தனியாகப் பிரிச்சுக் கொடுக்கணும். நீங்க இந்தச் சின்ன உதவியைச் செஞ்சீங்கன்னா எங்களுக்கு ரொம்ப உதவியாக இருக்கும்."

"சரிங்க, நாளையிலிருந்து அப்படியே செஞ்சுடறோம்."

"நன்றிம்மா."

மரங்கள் செய்யும் மகத்தான சேவை!



அன்புள்ள ஜக்கு...









● எம். இந்துமதி, திருவனந்தபுரம்

? ஜக்கு நீ சென்ற மாதம் காணாமல் போய்விட்டாயே, ஏன்?

என்னைத் தேடிய இந்துமதிக்கு நன்றி. சென்ற இதழ் விடுமுறைச் சிறப்பிதழாக அமைந்துவிட்டதால் வழக்கமாக வரும் சில பகுதிகளை ஆசிரியர் நிறுத்திவிட்டார். இதோ மீண்டும் வந்து விட்டேன்.

● ந. சுதாகர், கீழக்கோட்டையூர்

? கிரிக்கெட் மட்டை எதில் செய்யப்படுகிறது ஜக்கு?

'வில்லோ' என்ற மரத்தின் கட்டைகளிலிருந்து கிரிக்கெட் மட்டை செய்யப்படுகிறது.

● எம். வினோத், சங்கரன்கோவில்

? ஜக்கு, சமீபத்தில் ஒரு குறி சொல்பவர் எங்கள்



வீட்டருகே வந்து, ''ஜக்கம்மா சொல்றா, ஜக்கம்மா சொல்றா'' என்று ஏதேதோ கூறினார். உனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? உன்னை எப்படி அவருக்குத் தெரியும்?
வினோத் என்ற பெயரில் நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்களா? வினோத் குமார் என்று இன்னொரு ஊரில் ஒருவர் இருந்தால் அவருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம், எப்படி தெரியும் என்று கேட்க முடியுமா வினோத்? ஜக்குவுக்கும் ஜக்கம்மாவுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது.

● பா. கார்த்திகேயன், சென்னை
? காலியான வீட்டில் எதிரொலிப்பது ஏன் ஜக்கு?
நாம் பேசும் ஒலியை சுவர்கள் பிரதிபலிக்கின்றன. ஒலியின் பிரதிபலிப்பால் எதிரொலி ஏற்படுகிறது. பொருட்கள் ஒலியைச் சிதறடிக்கின்றன. ஒலி சிதறடிக்கப்படுவதால் பொருட்கள் உள்ள வீட்டில் எதிரொலி குறைகிறது. காலியான வீட்டில் எதிரொலி அதிகமாகிறது.

● ராம்குமார், மதுரை.
? காவல்துறையில் காவலர், தலைமை காவலர் என்று உயர் பதவி வரை வரிசைப்படுத்தி சொல்லு ஜக்கு.
கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டன்டெண்ட், அசிஸ்டண்ட் கமிஷ்னர் ஆப் போலீஸ், டெபுடி சூப்பிரண்டன்டெண்ட், டெபுடி கமிஷ்னர், கமிஷ்னர்.

● ப. காளிதாசன், பங்கேத்தாங்குடி
? ஆடு மட்டும் விலங்குகளில் நாம் செல்லமாகக் கருதுவதேன்?
உங்கள் வீட்டில் ஆடு மட்டும்தான் செல்லப் பிராணியாக வளர்க்கிறீர்கள் போலிருக்கிறது காளிதாசன். வீட்டில் வளர்க்க ஆடு, மாடு, நாய், பூனை போன்ற பிராணிகளை ஆதி காலத்திலிருந்தே தன் தேவைக்காக மனிதன் அடிமைப்படுத்தி விட்டான். இவையெல்லாம் பொதுவாக சாதுவான பிராணிகள், எனவே மனிதனின் செல்லப் பிள்ளைகளாகி விட்டன.

● ச. அழகுவேல், க. தருமத்துப்பட்டி
? புத்தகங்களில் கறுப்பு வண்ணத்தில் எழுத்துகளை அச்சடிப்பது ஏன் ஜக்கு?
கறுப்பு நிற எழுத்துகளைச் சுலபமாகப் படிக்க முடியும்; கண்களுக்கு உறுத்தாது என்ற காரணத்தினால்தான் கறுப்பு மையைப் பயன்படுத்துகின்றனர்.

● வி. பிரேம்குமார், தக்கலை
? யாருடைய சேவையை நீ பெரிதும் மதிக்கிறாய் ஜக்கு?
மரங்களின் சேவைக்கு இணை ஈடு எதுவும் இல்லை. ஐம்பது ஆண்டுகள் உயிரோடு இருக்கும் ஒரு மரம் 16 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை இவ்வுலகுக்கு அளிக்கிறது என்றால் எவ்வளவு பெரிய சேவை!

பிராணவாயு உற்பத்தி	ரூ. 2,50,000
காற்றை சுத்தம் செய்வது	ரூ. 5,00,000
மண்சத்து குறையாமல் பாதுகாப்பது	ரூ. 2,50,000
காற்றில் ஈரப்பதம் குறையாமல் பாதுகாப்பது	ரூ. 3,00,000
உயிரினங்களுக்கு நிழல் தருவது	ரூ. 2,50,000
உணவுச்சத்து கொடுப்பது	ரூ. 20,000
	15,70,000

இதில் விறகு, பூக்கள், பழங்கள் போன்றவற்றின் மதிப்பு சேரவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் பிரேம்குமார்!


ஓவியப் போட்டி




வெயில் எப்படி சுட்டெரிக்கிறது! இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு 'வெயில்'. வெயில் நேரத்தில் நீங்கள் காணும் காட்சியை வண்ணத்தில் ஓவியமாக வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி : 5.6.2004


SCHOLAR
100/100
Study and Computer Tables
Over 25 models to choose from
FREE DELIVERY In Chennai and Suburbs
CRAFTING FINE FURNITURE
JFA
SINCE 1937
• Royapettah : (Opp. Pilot Theatre) 18, Royapettah High Road, Ph : 2813 1384, 2813 2403 e-mail : jfa@vsnl.com
• Nanganallur : Showroom opening on June 4th Ph : 98410 26877
• Adyar : (Near Malar Hospital) Old No. 47, 1st Main Road, Gandhi Nagar, Ph : 2440 5120, 5211 7857
• Ashok Nagar : (Opp. Jawahar Vidyalaya), New 73, 4th Avenue, Ph : 2371 3493, 5203 3202
• Anna Nagar : (Near Anna Nagar Club), W-105, 2nd Avenue, Ph : 2622 3377, 5210 3996
Available on easy instalments – 0% interest*
*Conditions apply

பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்:

1. மிக்கி தொப்பி 2. மிக்கி கண் 3. மிக்கி ஷூ 4. மிக்கி இடது கை சுட்டைவிரல் 5. சக்கரம் 6. சக்கரம் ஸ்டாண்ட் 7. மின்னி புருவம் 8. மின்னி பெல்ட் 9. மின்னி ரிப்பன் 10. மின்னி மூக்கு

குறுக்கெழுத்துப் புதிர்



கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்


3. காவிரி உற்பத்தியாகும் இடம்(3)
5. தியாகராஜரின் சமாதி உள்ள ஊர் (5)
11. நிகழ்ச்சி (5)
13. ஆகாயம் (3)


வலமிருந்து இடம்

2. ஒரு வகை நோய் (3)
8. சிறிய மரக்கிளை (3)
10. நாள் என்பதை இப்படியும் கூறலாம்(3)
14. வலிமை (3)

மேலிருந்து கீழ்

1. மன நிறைவு (4)
2. பிள்ளையாரின் வாகனம் (4)
3. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ (4)
4. இது என்றாலே அப்பம் பங்கிட்ட கதை நினைவுக்கு வரும் (4)
7. பழைய இசைக் கருவிகளில் ஒன்று (2)
9. பகலில் சூரியன் தெரியும் தானே? (2)
10. பெண்கள் நெற்றியில் இதை இடுவர் (4)
11. அதிக ____ காதுக்கு ஆபத்து (4)
12. கோடைக் காலத்துக்கு ஏற்ற ஆடை ___ (4)





கீழிருந்து மேல்


6. உலகம் (4)
13. ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேகமாகச் செல்ல இது அவசியம் (4)
15. பிராணிகள், பறவைகள், பூச்சிகள் எல்லாம் ஒரே இடத்தில் வாழும் பகுதி (4)

- ஞா. மாடசாமி, சென்னை

விடை 46 ஆம் பக்கம்

கண்ணாடிக்குத் தங்கம்

மிக்ஸர் பிட்ஸ்



'கிளாஸ் ஸ்நேக்' என்பது கண்ணாடியோ, பாம்போ அல்ல. ஒரு வகைப் பல்லி.


'பிரைரி டாக்' என்பது நாய் இனத்தைச் சேர்ந்தது அல்ல, அது ஒரு வகை அணில்.

'ஃபிளையிங் ஃபாக்ஸ்' என்பது நரி அல்ல. அது ஒரு வகை வெளவால்.

'லேடி பேர்ட்' என்பது பறவை அல்ல, அது ஒரு வகை வண்டு.

'இராவணன் மீசை' என்பது மீசை அல்ல... அது ஒரு வகைப் புல்.

- ஆர். பிரசன்னா,
கரூர்



அமெரிக்காவிலுள்ள கோழிகளிடும் முட்டைகளை உடைக்காமல் ஒராண்டிற்கு அடுக்கி வைத்தால், அது நம் பூமிப் பந்தை விட நூறு மடங்கு பெரிதாக இருக்கும்!

- எம். வினோத்,
சங்கரன் கோவில்


இந்தியாவின் தேசிய மரம் - ஆலமரம்.

புலிகள் அதிகமுள்ள மாநிலம் - மேற்கு வங்காளம்.

வாத்துகள் அதிகமுள்ள மாநிலம் - தமிழகம்

திராட்சை நன்கு விளையும் இரு மாநிலங்கள் தமிழ்நாடு, ஆந்திரா

- சு. திவ்யஸ்ரீ, எட்டாம் வகுப்பு,
ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளி, வந்தவாசி



ஜெர்மனியில் உள்ள மெய்சன் நகரில் தான் ஐரோப்பாவின் முதல் பீங்கான் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அதனால் பீங்கானை மெய்சன் என்றே கூறுவதுண்டு. ஜோஹான் போட்ஜெர் என்பவர் செயற்கை யாகத் தங்கம் தயாரிக்கத் தெரிந்தவர் என்று கேள்விப்பட்ட சாக்சனி அரசன் அவரைக் கைது செய்து சிறையிலடைத்து தங்கம் செய்து தருமாறு வற்புறுத்தினான். உண்மையில் போட்ஜெர் தங்கம் செய்யும் முயற்சியில் தோல்வி கண்டவர். சிறையைச் சோதனைக் கூடமாக்கி அவர் பீங்கானைக் கண்டுபிடித்தது பெரும் சாதனையாக அமைந்தது. ஐரோப்பாவில் பீங்கானுக்குத் தங்கம் போல் மதிப்பு இருந்தது.

- வெ. ராணி,
நாமகிரிப்பேட்டை




போல் மதிப்பு!





காண்டா மிருகத்தின் தலையில் கொம்பு போல் காணப்படுவது உண்மையில் அதன் கொம்பல்ல. மனிதனின் முடி மற்றும் நகங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையான 'கெரட்டின்' என்னும் பொருளின் சேர்க்கையே அது.

தனது பூனையைத் தவற விட்ட குற்றத்திற்காக ஆன்ட்ரூவி சோட்ஸ்கி என்ற பெண்மணி 'ஏர் கனடா' விமான நிறுவனத்திடம் 5 மில்லியன் டாலர் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். உலகில் ஒரு பூனைக்காக இவ்வளவு அதிக தொகை கோரி போடப்பட்டுள்ள முதல் வழக்கு இதுவே.




- ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

வலது கையை நீட்டிக் குலுக்கும் வழக்கம் இன்றைய நாகரிகத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. முன் காலத்தில் வீரர்கள் வலது கையில் வாள் அல்லது துப்பாக்கி வைத்திருப்பார்கள். 'கையில் வாள் இல்லை, தாக்குவேன் என்ற பயம் வேண்டாம், நட்புறவுடன் நாம் இருப்போம்' என்பதற்கு அறிகுறியாக சந்திக்கும் இருவர் தமது வலது கரத்தை நீட்டிப் பற்றி குலுக்குவார்கள். வாள் மறைந்து விட்டது. ஆயினும் வழக்கம் மாறவில்லை.

- மு. ஹரிதாஸ், கும்பகோணம்

புராதன எகிப்தியர்கள் பூனைகள் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தனர். மிக உயர்ந்த பிறப்பை கொண்ட பூனையைக் காயப்படுத்துவதோ, கொல்வதோ பாவச் செயல் என்று கருதினர். பூனையைக் கொல்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பெர்ஷிய ராணுவம் ஒரு முறை பெலுசியம் என்ற நகரைத் தாக்கியது. அவர்கள் நகரை முற்றுகையிட்டனர். ஆனால்



எகிப்து வீரர்கள் அதனைத் தாக்குப் பிடித்தனர். எகிப்தியர்கள் பூனையை வெகுவாக மதிப்பார்கள் என்று பெர்ஷியர்களுக்குத் தெரியும். உடனே பூனைகளைப் பிடித்து கோட்டை சுவருக்கு மேல் வீசினர். பூனைகள் இவ்வாறு கொடுமைப்படுத்தப்படுவதை எகிப்தியர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் பெர்ஷிய ராணுவத்திடம் சரண் அடைந்தனர்.

- பி. கமல்நாத், நாமக்கல்

உலகில் அதிகமாக கண் பார்வையற்றவர்கள் உள்ள நாடு சீனா. அதே சமயம் உலகிலேயே அதிக அளவு கண்தானம் வழங்குபவர்களைக் கொண்ட நாடு ஸ்ரீலங்கா.



- மியூரியல் உஷா, மதுரை



அரசர் வைத்த

மகேந்திர பூபதி அரசரிடம் நிறைய மந்திரிகள் இருந்தனர். ஒருவர் மட்டும் அதிபுத்திசாலி. அரசர் அவரிடம் அடிக்கடி யோசனைகள் கேட்பார். இது மற்ற அமைச்சர்களுக்குப் பொறாமையைத் தந்தது.


ஒரு நாள் அந்த மந்திரி இல்லாதபோது மன்னரிடம், "மன்னா! நாங்களும் மந்திரி பூபாலருக்குச் சமமாகப் படித்தவர்களே! அப்படியிருக்கையில் அவரிடம் மட்டுமே ஆலோசனை கேட்பதேன்? அவருக்கு மட்டும் அடிக்கடி பரிசு வழங்குவதேன்?" என்று கேட்டனர்.

"அமைச்சர்களே! நீங்கள் அனைவருமே நன்கு படித்தவர்கள் தான்! பூபாலருக்குப் படிப்பறிவோடு சமயோஜித அறிவும் மிகுதி. அவரது யோசனைகள் எனக்கு லாபத்தை அளிப்பதால் அவருக்கு வெகுமதி அளிக்கிறேன்" என்றார் வேந்தர்.

"அப்படியென்ன அபூர்வ அறிவு? எங்கள் எதிரில் ஒரு சோதனை நடத்துங்கள். அதில் வெற்றி பெற்றால் நாங்களும் அவரை அதிமேதாவி என்று ஒப்புக் கொள்கிறோம்" என்றனர்.

அரசர் உடனே அங்கேயே படுத்துக் கொண்டு தனது மேலங்கியை எடுத்து, "என் உடலில் ஒரு பாகமும் தெரியாமல் போர்த்தி விடுங்கள்" என்றார்.

மேலங்கியை உதறிப் பிரித்தனர். அரசர் கை, கால்களைப் பரப்பிப் படுத்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவராய் முயன்றனர். கால் மூடினால் தலை தெரிந்தது. தலை மூடினால் கால் தெரிந்தது.



சோதனை!

✣ மாலதி ✣

அப்போது பூபாலர் வந்தார்.

"என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அரசர் இந்த அங்கவஸ்திரத்தால் உடம்பு தெரியாமல் போர்த்த வேண்டும் என்றார். முயற்சி செய்கிறோம், முடியவில்லை!" என்று சோர்வாகக் கூறினர்.

"இப்படி கொடுங்கள்" என்று அதை வாங்கியவர், "அரசே! கையைக் காலை மடக்கிப் படுங்கள்" என்றார்.



வேந்தர் அடக்க ஒடுக்கமாய் படுத்தார். பூபாலர் அங்கியால் உடல் தெரியாமல் போர்த்தி விட்டார்.

''இது அக்கிரமம்! அரசரை அடக்க ஒடுக்கமாகப் படுக்கச் சொல்வது குற்றமில்லையா?'' என்றார் ஒரு மந்திரி.

''அதிலென்ன தப்பு? அங்கி வரவு; அரசர் உடல் செலவு என்று வைத்துக் கொள்வோம். வரவுக்குள் செலவை அடக்கித்தான் ஆகவேண்டும். வரியை அதிகம் போட்டு மக்களைக் கசக்குவது போலத்தான் இதுவும்! போர்வை என்பது அயல்நாடு; அயல் தேசத்திற்குள் போகும் போது அரசருக்கும் அடக்கம் தேவையாயிற்றே!'' என்று பூபாலர் விளக்க,

'சபாஷ்' என்றபடி போர்வையை உதறி விட்டு எழுந்தார் வேந்தர். எல்லா அமைச்சர்களும், ''சரி, நாங்கள் ஒரு கேள்வி கேட்கிறோம். அதற்கு பூபாலர் தக்க பதில் சொல்ல வேண்டும்'' என்றனர்.

''கேளுங்கள்'' என்றார் மன்னர்.

''அரசரின் உள்ளங்கைகளில் ஏன் முடி முளைக்கவில்லை?'' என்று கேட்டனர்.

''என் போன்றவர்களுக்கு அரசர் இரு கரங்களாலும் வாரி வாரி வழங்குவதால் அரசரின் கையில் ரோமம் முளைக்க வில்லை'' என்றார் பூபாலர்.

''சரி, உங்கள் கைகளில் ஏன் முடி முளைக்கவில்லை?'' என்று கேட்டனர்.

''ஓயாமல் மன்னரிடமிருந்து பரிசு வாங்கிக் கொண்டே இருப்பதால் என் கைகளில் ரோமம் முளைக்கவில்லை'' என்று பதிலளித்தார் பூபாலர்.

''சரி, அரசர் கொடுக்கிறார், நீங்கள் வாங்குகிறீர்கள். உங்கள் இருவர் கைகளிலும் முடி முளைக்கவில்லை! ஆனால் எங்கள் கைகளிலும் முடி முளைக்க வில்லையே! அதற்கென்ன காரணம்?'' என்று கேட்டனர்.

''மற்றவர்கள் பரிசு வாங்குவதையும், புகழ் பெறுவதையும் கண்டு வயிறெரிந்து அடிக்கடி உள்ளங்கையைத் தேய்ப்பதால் மழுங்கிக் கிடக்கிறது. அதனாலேயே ரோமம் முளைக்க வில்லை! இந்த உலகிலேயே மூன்று ரக மனிதர்கள் தான் உண்டு. கொடுப்பவர், பெறுபவர், பொறாமைப் படுபவர். என்ன என் பதில் சரிதானே?'' என்றார் பூபாலர்.

மன்னர் புன்னகைக்க, மற்ற மந்திரிகள், ''அரசே! எதையும் மூன்று முறை சோதிக்க வேண்டும். இன்னொரு கேள்வி கேட்க அனுமதி வேண்டும்'' என்றனர்.

''மூன்று முறையென்ன! முப்பது முறை கேட்டாலும் பூபாலருக்குப் பல்லிடுக்கில் பதில் இருக்கும்'' என்றார் அரசர்.

''கழுதைக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டனர்.

''இந்த முறை மாட்டிக் கொண்டான்'' என்ற விஷமப் புன்னகை அவர்கள் முகத்தில் தெரிந்தது.

பூபாலர் தனக்கும், அமைச்சர்களுக்கும் உள்ள தூரத்தை அளந்து விட்டு, ''மூன்று முழம்''என்றார்.


''எங்களைக் கழுதை என்கிறாயா?'' என்று ஒருவர் கோபமாகக் கேட்க, ''தவறுதான்! கழுதைக்குப் பொறாமைப்படத் தெரியாதே'' என்றார் பூபாலர்.

அரசர் பூபாலரைக் கட்டிப்பிடிக்க அமைச்சர்கள் மயக்கமானார்கள்!

அமெரிக்காவின் 'லாஸ்வேகாஸ்' நகரிலுள்ள 'பெல்லாகியே' என்ற 36 மாடிகளையுடைய ஹோட்டல் 3000 அறைகளைக் கொண்டது. உலகிலேயே மிகப் பெரிய ஹோட்டல் இதுதான். இதனைக் கட்டி முடிக்க 6400கோடி ரூபாய் செலவாகியது.



சிலந்தி ஈயைப் பிடிக்க வழி காட்டுங்கள்



வீடு கட்டும் பிராணிகளைக் கண்டுபிடியுங்கள்



வரதனின் தங்கக் கட்டி!

கதை: சி. கௌசல்யா, ஒன்பதாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, இடைப்பாடி
படம்: பிள்ளை




பிரபலங்களின் வாழ்வில்...

லெனினின் துணிச்சல்!

லெனின் ஒரு சந்துக்குள் நுழைந்து கண் மறைவாகிவிட்டார்!

ஜார் அரசு, லெனினைத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தது. அவர், பீட்ரோகிராடிலிருக்கிறாரென்பது தெரிய வந்தது. அவ்வூரிலுள்ள, ஒவ்வொரு இல்லத்திலும் இரு போலீஸ்காரர்கள், அவரைப் பிடிப்பதற்காக, நிறுத்தி வைக்கப்பட்டனர். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள, குடும்ப அங்கத்தினர்களைத் தவிர, வேறு யார் வெளியே வந்தாலும், உடனே, அந்நபரைச் சுட்டுத் தள்ளுமாறு அரசு ஆணையிட்டிருந்தது. லெனினிருந்த வீட்டிற்கு முன்பும் இரு போலீஸ்காரர்கள், காவலிருந்தது லெனினுக்குத் தெரிய வந்தது. அவர் அன்றிரவு அங்கேயே உறங்கினார்.



• மார்க்ட்வைன்

மறுநாள் லெனின் விடிந்ததும் ஜன்னலைத் திறந்து பார்த்தார். வெளியில் இரு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். நிச்சயமாக, அவர்கள் அவருடைய புகைப்படத்தைப் பார்த்திருப்பார்கள். தன்னை அவர்கள் அடையாளம் கண்டு கொள்வார்களென்பது லெனினுக்குத் தெரியும். ஆனாலும் அவர் துணிச்சலுடன் தமது கோட்டையணிந்து, ஒரு குடையைப் பிடித்துக் கொண்டு அமைதியாக நடக்கத் துவங்கினார்.

இக்காட்சியைக் கண்ட போலீஸ்காரர்களில் ஒருவர், "இவர் லெனின் மாதிரியே இருக்கிறாரே?" என்று கூறினார். அதற்கு மற்றொருவர், "இவர் நிச்சயமாக லெனினாக இருக்க முடியாது. அவராகயிருந்தால், நாமிருவரும் இங்கு காவலுக்கு நின்று கொண்டிருக்கும்பொழுது இப்படி பயமின்றி அமைதியாக, நிதானமாக நடந்து செல்வாரா?" என்று கூறினார். அவர்களிருவரும், உரையாடிக் கொண்டிருக்கும்பொழுதே

முயன்றால் முடியும்

நீதிபதி மகாகோவிந்த ரானடே ஒரு முறை கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார். அவர் ஒரு வங்காளிப் பத்திரிகையை வாங்கியபோது அவரது மனைவி, "உங்களுக்கு வங்க மொழி தெரியாதே" என்றார். அதற்கு ரானடே, "அதனாலென்ன? ஒரு சில நாட்களில் நான் வங்காளி மொழியைக் கற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார். அவ்வாறே அவர் அம்மொழியைக் கற்று, மனைவிக்கு வங்கப் பத்திரிகையைப் படித்

• லெனின்



துக் காட்டினார்.

- என். விசாலாட்சி,
மதுரை

பொன்னுக்கு மண்ணா?

சிவாஜி தன் குருவான இராமதாசரிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். ஒருமுறை அவர் குரு காணிக்கையாகப் பொற்காசு களையும் நவரத்தினங்களையும் அனுப்பி வைத்தார்.

பதிலுக்கு இராமதாசர் கைப்பிடி அளவு மண், சில கூழாங்கற்கள், ஒரு குப்பியில் குதிரைச் சாணம் மூன்றையும் கொடுத்து அனுப்பினார். இதைப் பார்த்த சிவாஜி மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். அந்தப் பொருள்களைப் பணிவுடன் தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. சிவாஜியின் தாயார் இதைப் பார்த்தார். தன் மகனின் செயல் களைப் பார்த்து அவருக்குக் கோபம் வந்தது. "மகனே! என்ன செய்கிறாய் நீ? உன் குரு நாதருக்கு விலை உயர்ந்த பொன்னும், முத்தும், மணியும் அனுப்பி வைத்தாய். ஆனால் அவர் பதிலுக்கு என்ன அனுப்பி வைத்திருக்கிறார். உன்னை இழிவு படுத்துவது போல அந்தப் பொருள்கள் உள்ளன. இதற்கே இப்படி மகிழ்ச்சி அடைகிறாயே" என்று கேட்டார். "அம்மா, என் குருநாதரின் பெருமை தெரியாமல் இப்படி பேசுகிறீர்கள். இந்த மூன்று பொருள்களையும் எதற்காக அவர் அனுப்பி இருக்கிறார் என்பதை அறிந்தால் மகிழ்ச்சி அடைவீர்கள். அவர் அனுப்பிய இந்த மண், நான் மொகலாய நாடுகளை வெல்வேன். அந்நாடுகளை என் ஆட்சியின் கீழ் கொண்டு வருவேன் என்கிறது. இந்தக் கூழாங்கற்கள் நான் மாபெரும் கோட்டை களைக் கட்டுவேன் என்று சொல்கிறது. இந்தக் குதிரைச் சாணம் வலிமை மிகுந்த பெரிய குதிரைப் படையை நான் அமைக்கப் போகிறேன் என்று உணர்த்துகிறது. இவை அனைத்தும் எதிர்காலத்தில் கண்டிப்பாக நிகழும்" என்று உறுதியுடன் சொன்னார்.

"மகனே! நான் அவசரப்பட்டு இப்படி பேசிவிட்டேன்" என்று வருந்தினார் அவரது தாயார்.

- அ. ராஜா ரஹ்மான்,
கம்பம்

நன்றாக இருந்தது!

பிரபல எழுத்தாளர் மார்க் ட்வைன், ஒரு மாதா கோயிலில், பாதிரியாரின் பேச்சைக் கேட்டார். அந்தப் பேச்சு நன்றாக இருந்தது என்று எல்லோரும் பாராட்டினர். மார்க் ட்வைன் அவரிடம் சென்று, "உங்களுடைய பேச்சு நன்றாகவே இருந்தது. நீங்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் என் நண்பர் எனக்குக் கொடுத்த புத்தகத்தில் அப்படியே இருக்கிறது" என்று கூறினார்.

"நான் யாருடைய பேச்சையும் மனப் பாடம் செய்து ஒப்பிக்கவில்லை. சுயமாகவே சிந்தனை செய்து தான் பேசினேன்" என்று மறுத்தார் பாதிரியார்.

மார்க் ட்வைன், தன்னுடைய கருத்தை வலியுறுத்தி, தன் கருத்துக்கு ஆதாரமாக அந்தப் புத்தகத்தைப் பாதிரியாருக்கு மறுநாள் அனுப்பி வைத்தார்.

- என். ஜரினா பானு,
திருப்பட்டினம்

அமெரிக்காவின் சான்ஃபிரான்சிஸ்கோவில் உள்ள ஒரு ஹோட்டலின் பெயர் 'மெக்ஸிகன் ரெஸ்டாரண்ட்.' இந்த ஹோட்டலின் பெயரையும், அதன் சின்னத்தை யும் கையில் பச்சை குத்திக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் அந்த ஹோட்டலில் இலவச மாகச் சாப்பிடலாம்!'





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ____________________

முகவரி : ____________________

____

____

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

புதையல்

பன்றித் தீவில் இறங்கியதுமே பாலுவுக்கு உற்சாகம் பெருகிவிட்டது. வெண்ணெய் மாதிரி இருந்தது அந்தத் தீவின் மணல். கால் புதையப் புதைய நடந்து கொண்டும் ஓடிக் கொண்டுமே இருக்கலாம் போலிருந்தது. பத்தடிக்கு ஒரு காட்டு மரமும், பறந்தோடும் சிறு குருவிகளும், தொலைவில் மட்டுமே தென்படும் வெண் நாரைகளும் கடலின் இரைச்சலுமாகச் சேர்ந்து அவன் பரவசத்தை அதிகரித்துக் கொண்டிருந்தன. அடடா, வாழ்ந்தால் இந்த மாதிரி ஓர் இடத்தில் அல்லவா வாழ வேண்டும் என்று நினைத்தான்.

ஆனால் தீவில் மனிதர்கள் யாரும் வாழ்வது மாதிரியே தெரியவில்லை. மகாலிங்க வாத்தியார் சொன்னார்: "இங்க பொதுவா வீடுகள் கிடையாது. சில மீனவர்கள் மத்தியான நேரங்கள்ள இளைப்பாற வருவாங்க. சாப்பிட்டுப் படுத்துத் தூங்கிட்டுப் போவாங்க. மத்தபடி ஆள் நடமாட்டமில்லாத தீவு இது."

இரண்டு மணி நேரம் சாரணர் வகுப்புகள் மிகத் தீவிரமாக நடந்தது. ஓடச் சொல்லியும் குதிக்கச் சொல்லியும் உடற்பயிற்சிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார் மகாலிங்க வாத்தியார்.

"குண்டா! நல்லா ஓடுடா. வேர்த்துடணும். மூச்சு இறைக்கணும். அப்பத்தான் இளைப்பே. அப்பத்தான் நீச்சல் கத்துக்க முடியும். அப்பத்தான் நீந்தியே இங்க நீ அடிக்கடி வரவும் முடியும்" என்றார்.

"சான்ஸே இல்லை சார். இந்தத் தீவு கடலோர காவல்துறை கட்டுப்பாட்டுல இருக்காம். யாரும் சுலபமா வர முடியாதாம்" என்றான் பாலு.

"உனக்கு எப்படிடா தெரியும்?"

"வரும்போது அந்தப் படகுல வந்தாரே ஒரு ஆபீசர். அவர்கிட்டே கேட்டேன்."

"அடடே, வெரிகுட் தகவல்களைச் சேகரிக்கறது நல்ல பழக்கம்" என்றார் மகாலிங்க வாத்தியார்.

சாரணர் பயிற்சி வகுப்புகள் ஒருவாறு முடிவடைந்ததும், மாணவர்களுக்கு சுடச்சுட மதிய உணவாக புளியோதரைப் பொட்டலங்களும் தயிர்சாதப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

"கீழ இரைக்காம சாப்பிடணும் பசங்களா" என்றார் வாத்தியார்.

2

பாலு நைஸாக இரண்டு பொட்டலங்கள் எடுத்துக் கொண்டு சாப்பிடத் தனியாகப் போனான். கடலோர மணல் வெளியைத் தாண்டியதுமே வரிசையாக நிறைய காட்டு மரங்கள் தொடங்கியிருந்தன. அடர்ந்த, அடிப்பகுதி பருத்த மரங்கள்தான் அனைத்துமே. "இந்தத் தீவுல இருக்கற பல தாவரங்கள் மருத்துவ குணம் மிக்கவை. அதுங்களைப் பராமரிக்கறதுக்காகத்தான் இதைப் பாதுகாக்கப்பட்ட பகுதியா அரசாங்கம் வெச்சிருக்கு" என்று கடலோர காவல்துறை அதிகாரி சொன்னது, அவன் நினைவுக்கு வந்தது.



பாலுவுக்கு அந்தத் தீவை முழுவதுமாகச் சுற்றி வர வேண்டும் என்று விருப்பம் எழுந்தது. மொத்தப் பரப்பளவே ஒன்றரை கிலோமீட்டர்தான் என்று சொல்லியிருந்தார்கள். கடற்கரை ஓரமாகவே சுற்றி வந்தால், ஐம்பது நிமிடத்தில் சுற்றிவிடலாம் என்று கேள்விப்பட்டிருந்தான். ஒரு ரவுண்டு போகலாமா என்று நினைத்தான். வாத்தியார் உதைப்பார் என்று பயமாகவும் இருந்தது. யாராவது நாலு பசங்கள் உடன் வந்தால் தைரியமாகப் போகலாம். அல்லது மகாலிங்க வாத்தியாரையே கூட அழைத்துப் போகச் சொல்லலாம். காட்

தீவு!

பா.ராகவன்



டுக்குள் பயணம் செய்வது எப்பேர்ப்பட்ட அனுபவம்!

இவ்வாறு நினைத்துக்கொண்டே சுமார் இருபதடி தூரம் நடந்திருப்பான். சட்டென்று சூரிய வெளிச்சம் மிகவும் மங்கி, மரங்கள் மிகவும் அடர்த்தியாக மூடியிருப்பதை உணர்ந்தான். எங்காவது புலி, கரடி ஏதாவது வந்து விடுமோ என்று ஒருகணம் அச்சமாக இருந்தது. உடனே 'சேச்சே, அந்த மாதிரி இடத்துக்கெல்லாம் அழைத்து வர

மாட்டார்கள்' என்றும் நினைத்துக் கொண்டான். திரும்பிப் போய்விடலாம் என்று நினைத்த வேளையில், இடைவேளை நேரம் இன்னும் நிறையவே மிச்சமிருக்கிறது என்பதும் நினைவுக்கு வந்தது. பொட்டலங்கள் தீர்ந்ததும் தண்ணீர் வேண்டும் போலிருந்தது. அடடே, தண்ணீரை மறந்துவிட்டோமே என்று நாக்கைக் கடித்துக் கொண்டான்.

வேறு வழியில்லை. திரும்பித்தான் ஆக வேண்டும் என்று அலுத்துக் கொண்டே திரும்பியவனுக்கு, சடாரென்று இன்னொரு யோசனையும் உதித்தது. என்னதான் தீவு என்றாலும், கடலுக்கு நடுவே இருப்பதென்றாலும், இத்தனை தாவரங்கள், மூலிகைகள் முளைக்கும் இடத்தில் தண்ணீர் இருக்காதா என்ன? ஒரு பத்து நிமிஷம் மேற்கொண்டு சுற்றிவிட்டுத் திரும்பிவிடலாம் என்று நினைத்துக் கொண்டு மேலே நடந்தான்.

நடக்க நடக்க, கானகம் மிகவும் இருண்டுகொண்டே வந்தது. வெளிச்சம் துளியும் இல்லாமல் வெறும் கடலின் இரைச்சல் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு லாங்-ஜம்ப் செய்தால் கடல் வந்துவிடும் என்றுதான் நினைத்தான். ஆனால் அக்கம்பக்கத்தில் மரங்கள்தான் கூடிக் கொண்டு வந்தனவே தவிர, கடலைக் காணோம். ஒரு வினாடி நின்று திரும்பிப் பார்த்தான்... வந்த பாதை சரியாகவே தெரிந்தது. ம்ஹூம். பிரச்னை இல்லை. எப்படியும் பத்திரமாகத் திரும்பிவிட முடியும்!

சில பறவைகளின் குரல் 'க்ரீச்க்ரீச்' சென்று இடைவிடாமல் கேட்டுக் கொண்டே இருந்தது. ரசித்தபடியே மேலும் நடந்தவன் சற்று தூரம் போனதும் வலப்புறம் கொஞ்சம் தள்ளி தொலைவில் ஒரு பாழடைந்த வீடு இருப்பதைக் கண்டான். உடனே அவனுக்கு மிகவும் ஆச்சர்யமாகப் போய்விட்டது. மனிதர்களே இல்லாத தீவில் வீடு மட்டும் எப்படி இருக்கிறது? யார் கட்டியிருப்பார்கள்? எப்போது கட்டியிருப்பார்கள்?

ஆவல் அதிகரிக்க, அதை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அது மிகப் புராதனமான வீடு போலிருந்தது. முன்புறம் பாதிக்கு மேல் உடைந்து உதிர்ந்திருந்தது. பழுப்பாகிப் போன கறுப்புப் பலகை ஒன்று உடைந்து ஓர் ஓரமாகக் கிடந்தது. அதில் 'கடலோர...' என்கிற வார்த்தை மட்டும்தான் படிக்கும்படி இருந்தது. மற்றதெல்லாம் அழிந்திருந்தது. ஓஹோ, இது அரசாங்கக் கட்டடம்தான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். ஆனால் யாரும் உள்ளே இருந்து வேலை பார்ப்பதாகத் தெரியவில்லை. கதவு பூட்டப்பட்டிருந்தாலும் ஜன்னலெல்லாம் முழுவதுமாக உடைந்து, கட்டடத்தின் உள்புறம் முழுவதுமே பார்க்கும் விதத்தில் இருந்தது.

கிட்டே போய் எட்டிப் பார்த்தான். நின்று கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு மீண்டும் கீழே இறங்கி, அந்தப் பாழடைந்த கட்டடத்தை ஒருமுறை சுற்றி வந்தான். ஒரு ஆபீஸ் இங்கே இருந்திருக்கிறது என்றால், ஒரு குழாய் இருக்காதா என்ன? ஆபீஸ் இல்லாவிட்டாலும் அந்தக் குடிநீர்க் குழாய்க்கு இப்போது உயிர் இருக்காதா என்ன?

அவன் எதிர்பார்த்தபடியே அந்தக் கட்டடத்தின் பின்புறம் சுவரை ஒட்டியபடி ஒரு பிளாஸ்டிக் பைப் அழுக்கேறிக் கிடந்தது. பைப்பின் மறுமுனை ஒரு குழாயில் சொருகப்பட்டிருந்தது! அப்படி போடு! அவன் ஆர்வமுடன் குழாயைத் திறந்து பார்த்தான். ஆஹா, தண்ணீர் வருகிறதே!

ஆனால் குடிக்க முடியாதபடி நீர் உப்பாக இருந்தது. எனவே, அவன் வெறுமனே கைகளை மட்டும் கழுவிக் கொண்டு, முகத்


ஹங்கேரி நாட்டில் 'டெப்ரெகன்' என்ற நகரிலுள்ள ஒரு ஹோட்டலில் ஒவ்வொரு உணவு மேஜை மீதும் ஒரு கடியாரம் வைக்கப்பட்டிருக்கும். நாம் ஒரு உணவுக்கு ஆர்டர் கொடுத்து பத்து நிமிடங்களுக்கு மேல் அது தாமதமாக வந்தால் அந்த உணவு நமக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

- எஸ். ராஜம்

தையும் தண்ணீர் அடித்து புத்துணர்ச்சி ஏற்றிக் கொண்டான். மறுபடியும் குழாயை மூடியபோதுதான் அந்தச் சத்தம் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

யாரோ பேசுவது போலல்லவா இருக்கிறது? இந்த இடத்தில் யார் இருப்பார்கள்? அதுவும் பாழடைந்த பழைய அலுவலகத்தில்!

இரண்டு அடுக்குகளாக இருந்த அந்தக் கட்டடத்தின் மாடிக்குப் போகும் படிகள் உடைந்து சிதிலமாகியிருந்ததை முன்புறத்தில் நின்றபோதே அவன் கவனித்திருந்தான். ஆனால் மாடியிலிருந்து இப்போது பேச்சுக்குரல் வருகிறதே! யாராக இருக்கும்? பூட்டிக் கிடக்கும் கட்டடத்துக்குள் எப்படி அவர்கள் நுழைந்து, உடைந்த மாடிப்படி வழியே ஏறி மேலே போயிருக்க முடியும்?



ஜன்னல் வழியாகப் போக முடியும்தான். ஆனால் கதவைத் திறக்காமல் ஜன்னல் வழியே எகிறிக் குதித்து உள்ளே போய், மாடி ஏறி ரகசியமாகப் பேசுபவர்கள் நிச்சயம் கடலோரக் காவல்படை அதிகாரிகளாக இருக்க முடியாது!

என்ன செய்யலாம்? அவனுக்குக் கொஞ்சம் திகிலாகவும், அதே சமயம் ஆர்வமூட்டும் விதமாகவும் இருந்தது மாடியிலிருந்து வந்த அந்தக் கிசுகிசுப்புப் பேச்சு. திரும்பிப் போய்விடலாம் என்றுதான் முதலில் நினைத்தான். ஆனால் அப்படி என்னதான் அவர்கள் பேசுகிறார்கள்? நின்று கேட்டால்தான் என்ன என்றும் தோன்றியது.

ஒரு முடிவுக்கு வந்தவனாக விறுவிறு வென்று அந்தக் கட்டடத்தைச் சுற்றிக் கொண்டு முன்புறம் போனான். உடைந்து கிடந்த ஜன்னலில் ஏறி உள்ளே குதித்தான். கீழே தரை உடைந்து மண்ணும் சிமெண்ட்டுமாக இருந்தது. பழையகால மேசை நாற்காலிகள் இரண்டும் உடைந்து ஓர் ஓரத்தில் கிடந்தன. மாடிப் படியோரம் போய் நின்றவன், மேலே ஏறலாமா என்று யோசித்தான். அது மரப்படி. ஏறினால் சத்தம் வரும் என்பதால், அங்கேயே நின்று காதைத் தீட்டிக் கொள்ள முடிவு செய்தான். இரண்டு நிமிடங்கள் அமைதி காத்ததும், பேச்சு துல்லியமாகக் கேட்டது. மாடியில் இரண்டு பேரல்ல; மூன்று பேர் இருக்கிறார்கள் என்பதும் புரிந்தது!

"இன்னிக்கு ராத்திரி நாம கிளம்பறோம். திரும்பி வர சரியா அஞ்சு நாள் ஆகும். அதாவது அடுத்த புதன்கிழமை நாம திரும்பி இங்க வரோம். அதுக்குள்ள நமக்கு இங்க புதையல் இருக்கற படத்தோட ப்ளூ-பிரிண்ட் கிடைச்சுடும். அடுத்த புதன் கிழமைங்கறது அமாவாசை தினம். அன்னிக்கு ராத்திரியே தோண்டி எடுத்துக்கிட்டு படகு பிடிச்சா, விடியற நேரம் அங்க போய்ச் சேர்ந்துடலாம்..."

ஒருத்தன் பேசிக் கொண்டிருக்க, மற்ற இருவரும் 'உம்' 'உம்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பாலுவுக்கு மூச்சிறைத்தது. இதென்ன, கதைகளில் வருவது மாதிரி, புதையல், அமாவாசை என்று என்னென்னவோ பேசுகிறார்கள்! யார் இவர்கள்? கொள்ளைக்காரர்களா? இந்தக் காலத்தில் புதையலெல்லாம்கூட இருக்குமா என்ன? யார் புதைத்து வைத்திருக்கிறார்கள்? அந்த விவரம் இவர்களுக்கு எப்படி தெரிந்தது? அதென்ன ஐந்து நாள் கணக்கு?

குழப்பமும் பயமும் அவனைக் கவ்விக் கொண்டன. மிகவும் வியர்த்தது. சாப்பிட்ட இரண்டு பொட்டலம் புளியோதரையும் ஜீரணமாகிவிட்ட மாதிரி இருந்தது. இங்கிருந்து முதலில் போய்விடலாம் என்று நினைத்தான். அவன் திரும்பியபோது தோளில் ஒரு கை விழுந்தது!

அதிர்ந்து திரும்பிய பாலுவுக்குத் தன்னைத் தொட்டவனைப் பார்த்ததும் அதிர்ச்சி இருமடங்கானது!

(தொடரும்)



தேர்ந்த தையற்

"பாரதி... பாரதி! எங்கெல்லாம் உன்னைத் தேடறது? ம்... இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?" என்று கேட்டபடி அம்மா தோட்டத்துக்கு வந்தார்.

"அம்மா... கொஞ்சம் சத்தம் போடாமல் இருங்க" என்றபடி பெரிய குரோட்டன்ஸ் செடியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பாரதி.

அருகில் வந்து பார்த்த அம்மா "என்ன பேர்ட் வாட்ச்சிங் பண்ண ஆரம்பிச்சிட்டியா?" என்றார்.

"அம்மா, நானும் அரைமணி நேரமா இந்தப் பறவைகளைப் பார்த்துட்டே இருக்கேன். ரொம்ப சுவாரசியமா இருக்கு. நான் பார்த்துட்டு இருக்கிறதை அது கவனிச்சும் கண்டுக்காமல் ஏதோ செடியைச் சுற்றி சுற்றி வந்துட்டு இருக்கும்மா."

"பாரதி, இந்தப் பறவைக்குப் பெயர் தையற்சிட்டு. மற்றப் பறவைகளைப் போல் மனிதர்களைக் கண்டால் பயப்படாது. ரொம்பப் பழகின மாதிரி நடந்து கொள்ளும்."

"ஏம்மா, ஒவ்வொரு இலையா சோதிக்குது?"

"இலையில கூடு கட்டறதுக்காகத்தான் இலைகளைப் பரிசோதிக்குது. அதோ பார் இலையைத் தேர்ந்தெடுத்துருச்சு" என்ற அம்மா, பாரதியுடன் சேர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

"அம்மா கூடு கட்டப் போற சிட்டு ஆணா, பெண்ணா?"

"ஆண் சிட்டு மட்டும்தான் கூடு கட்டும். அதோ பார் ரெண்டு பெண் சிட்டுகள் உட்கார்ந்து கூடு கட்டுவதை வேடிக்கைப் பார்க்கத் தயாராக இருக்கின்றன."



கலைஞர்!

ஆண் சிட்டின் வாலில் இரண்டு இறகுகள் நீட்டிக் கொண்டு ரொம்ப அழகாக காட்சியளித்தது. வயிற்றுப் பக்கம் வெள்ளையாகவும், மேல் பகுதி ஆலிவ் பச்சை நிறத்திலும் காணப்பட்டது. தலையின் உச்சி பிரௌன் நிறத்தில் இருந்தது.

ஆண் சிட்டு வேகமாகப் பறந்து சென்று, சில

இலைகளை அழகாக தைக்கிறதாலதான் இவற்றிற்குத் தையற்சிட்டு என்று பொருத்தமான பெயர் வைத்திருக்கின்றனர். ஆங்கிலத்திலும் Tailor Bird என்று இதே பொருளில் அழைக்கப்படுகிறது.



எஸ்.சுஜாதா

நிமிடங்களில் திரும்பி வந்தது. அதன் அலகில் நார் போன்ற பொருள் இருந்தது. அதை வைத்து இரண்டு, மூன்று இலைகளை இணைத்து தைக்க ஆரம்பித்தது. ஒரு பக்கம் தைக்கும்போது இன்னொரு பக்கம் தையல் பிரிந்து கொண்டு வந்தது. மீண்டும் பொறுமையாக இலைகளை இழுத்து வைத்து தைத்து முடித்தது.

''அம்மா, ரொம்ப அதிசயமாக இருக்குது! சின்னஞ்சிறு பறவை இவ்வளவு நேர்த்தியாக தைக்கிறதைப் பார்க்கும்போது இயற்கையின் படைப்பை நினைத்து ஆச்சர்யமா இருக்கும்மா.''

''இவ்வளவு அழகாக தைக்கிறதாலதான் இவற்றிற்குத் தையற்சிட்டு என்று பொருத்தமான பெயர் வைத்திருக்கின்றனர். ஆங்கிலத்திலும் Tailor Bird என்று இதே பொருளில் அழைக்கப்படுகிறது.

''அம்மா, தைத்த இலைக்குள் பஞ்சு, நார் எல்லாத்தையும் போடுது பாருங்க.''

''ஆமாம். இப்போ கூடு தயார். இதில் பெண் பறவை முட்டையிடும்'' - அம்மா சொல்லிக் கொண்டிருக்கும்போதே

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு


ஏப்ரல் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. கெய்ரோ
2. அலெக்ஸாண்ட்ரியா, லக்ஸர், அஸ்வான், சூயஸ் கால்வாய்
3. அரபிக்
4. எகிப்தியன் பவுண்ட்
5. நைல்
6. இங்கிலாந்து

பரிசு யாருக்கு?

1. த. சாருமதி, காட்டுமன்னார் கோயில், கடலூர் மாவட்டம்.
2. ப. ஜம்ருத், ஐந்தாம் வகுப்பு, ஹோலிகிராஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.



3. ஜி. பி. ரமேஷ், சுந்தரராஜபுரம், விருதுநகர் மாவட்டம்.
4. ம. சந்தோஷ், சிவகாசி.
5. தி. சாருலதா, தஞ்சாவூர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

'டோவிட்... டோவிட்' என்ற சத்தம் கேட்டது.

"அம்மா, இந்தச் சத்தத்தை நான் ஏற்கனவே கேட்டிருக்கேன். தையற்சிட்டுதான் கத்துகிறதென்று இப்பொழுதுதான் தெரிகிறது."

"சரி பாரதி, சாப்பிடக் கூப்பிடத்தான் வந்தேன். உன்னோடு நானும் சேர்ந்து சுவாரசியமான நிகழ்ச்சியைப் பார்த்துட்டேன். வா போகலாம்."

பாரதி தையற்சிட்டை விட்டுப் பிரிய மனமின்றி அம்மாவைப் பின் தொடர்ந்தாள்.

- தையற்சிட்டின் அறிவியல் பெயர் orthotomus Sutorius. சிட்டுகளில் மிகவும் பிரபலமானது இது.
- குத்துச் செடிகள் உள்ள தோட்டங்களில் தனித்தோ, ஜோடியாகவோ திரியும்.
- பூச்சிகள், புழுக்கள், முட்டைகள், பூந்தாதுக்கள், தானியங்கள் போன்றவற்றை உண்ணும். தேன் எடுப்பது விருப்பமான பொழுதுபோக்கு.
- தாவர நார்களை முறுக்கி, நுனியில் முடிச்சிட்டு அழகாக இலையைத் தைக்கும்.
- தரையிலிருந்து 2 முதல் 3 அடி உயரத்திலேயே கூடு கட்டும்.
- பெண் பறவை ஒரு தடவைக்கு 3 அல்லது 4 முட்டைகள் வரை இடும். முட்டைகள் சிவப்பு நீலத்தில் அல்லது வெள்ளை நீலத்தில் இருக்கும். அவற்றின் மேல் பிரௌன் வண்ணப் புள்ளிகள் காணப்படும்.
- ஆண் சிட்டின் வாலில் இரண்டு இறகுகள் நீண்டு இருக்கும். ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்த ஆரம்பித்ததும் வால் சாதாரணமாகி விடும்.
- தையற்சிட்டில் 5 பிரிவுகள் உள்ளன.
- அகன்ற இலைகள் உள்ள செடிகளில் பசுமையான இலைகளை இணைத்து கூட்டை உருவாக்கும்.

ஆர்க்கிமிடீஸின் வரலாறு

உங்கள் நூலகம்

'ஒரு கதை ஒரு தகவல்' - கவிஞர் செல்ல கணபதி - பக் 110, ரூ. முப்பது - பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

குழந்தைக் கவிஞரால் பட்டை தீட்டப்பட்ட கவிஞர் வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள ஆசிரியரின் படைப்பு இது. நவீன உலகில் சிறுவர்களும்கூட பல பிரச்னைகளைச் சந்திக்கும்படி நேரிடுகிறது. இவற்றை எப்படி எந்தக் கோணத்தில் அணுகி பண்பு நெறிகள் பாதிக்கப்படாது முடிவெடுப்பது என்பதை முப்பது கட்டுரைகளில் குட்டிக் கதைகள் அல்லது பெரியோர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உதாரணம் காட்டி, மிகத் திறமையாக விளக்கியுள்ளார் ஆசிரியர். இவையாவும் சிறுவருக்காக கோவை வானொலியில் ஒலிபரப்பானவை. ஜெயராஜின் அருமையான படங்கள் நூலுக்கு சிறப்பூட்டுகின்றன.



அறிவியல் அறிஞர் ஆர்க்கிமிடீஸ் - தி.சு. கலியபெருமாள், பக். 64, ரூ.பதினாறு, பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

'யுரேகா யுரேகா' என்பது அறிவியல் உலகில் புகழ் பெற்ற சொல். கண்டுபிடித்து விட்டேன் என்பது இதற்குப் பொருள். இதை வழங்கிய பெருமைக்குரிய அறிஞர் ஆர்க்கிமிடீஸின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல் இது. வாழ்க்கை வரலாறுகளை சிறுவர்க்கேற்ற முறையில் சுவைபட எழுதுவதில் திறமை பெற்ற ஆசிரியரின் படைப்பு. சிறுவர் உலகம் படிக்க வேண்டிய நூல்.

மகாபாரதக் குட்டிக் கதைகள், நான்கு தொகுதிகள் - ஆர். பொன்னம்மாள், முதல் இரு தொகுதிகள் பக். 136 3, 4 ஆம் தொகுதிகள் பக். 144, ஒவ்வொரு தொகுதியும் ரூ. இருபத்தெட்டு, திருவரசு புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, சென்னை 17

சிறுவர்க்காக நீண்ட காலமாகப் பொறுப்புணர்வோடு எழுதி வரும் விரல்விட்டு எண்ணக்கூடிய பெண் எழுத்தாளர் வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள ஆசிரியை. பாரத நாட்டின் இதிகாசமான மகாபாரதத்தை தனக்கே உரிய எளிய நடையில் மீண்டும் வழங்கியுள்ளார். படங்களும் தயாரிப்பும் அருமை.

வ.உ.சியின் முத்தான மொழிகள் - எழிலமுதன் தொகுத்தது. பக். 88, ரூ.இருபத்தைந்து, மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் தெரு, சென்னை - 17.


கப்பலோட்டிய தமிழரான வ.உ. சிதம்பரனார் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய அல்லது கூறிய பொன்மொழிகளின் தொகுப்பு. மேடைப் பேச்சாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் நன்கு பயன்படக்கூடிய வித்தியாசமான தொகுப்பு.

- ரே


ஈகை குணத்துக்குக் கிடைத்த பரிசு!
ஜியஸ் கடவுள், அவரின் தூதுவர் ஹெர்ம்ஸ் இருவரும் ஒருமுறை பூலோகம் வந்தனர். சாதாரண மனிதர்களைப் போல் உடை அணிந்து கொண்டனர்.
யார் நீங்கள்?
நான் இவர்களை இதற்கு முன் பார்த்ததில்லை.
நமது நாய்களை அவிழ்த்து விடுவோம்.
ஹா...ஹா... இப்ப நடக்கப் போற வேடிக்கையைப் பார்க்கலாம்.
ஹா...ஹா.... இன்னும் வேகமாகப் போய்ப் பிடி.
லொள்... லொள்...
லொள்... லொள்...
© JINGLE BELL CREATIONS
உதவி....
ஓடு...
லொள்... லொள்
லொள்... லொள்



பார்க்க எவ்வளவு சுவாரசியமாக இருந்தது.
இவங்க ஓடினதை நினைச்சா சிரிப்பை அடக்க முடியவில்லை.
ஜீயஸ், ஹெர்ம்ஸ் இருவரும் நாய்களிடமிருந்து தப்பி வந்து, நின்றனர்.
ரொம்ப சோர்வாக இருக்கு.
எனக்கும் தான்.
அந்த வீட்டில் இரவு தங்கிக் கொள்வோம்.
அனுமதி கிடைக்குமா என்று பார்க்கலாம்!
©JINGLE BELL CREATIONS
அங்கே...
என்ன? இங்கே தங்குகிறீர்களா? சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணுங்க.
ஜீயஸ், ஹெர்ம்ஸ் இருவரும் அந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்றனர். ஆனால் யாரும் கருணை காட்ட வில்லை. கடைசியாக...
அதோ ஒரு வீடு.
சரி, வா போய்ப் பார்க்கலாம்.
வீட்டை நோக்கிச் சென்றனர்.



எவ்வளவு முயன்றும் வாத்தை இருவராலும் பிடிக்க இயலவில்லை. கடைசியில் ஜீயஸின் காலடியில் வந்து உட்கார்ந்தது வாத்து.





இந்தக் கிராமத்தில் ஒருவரும் உணவு, உறைவிடம் கொடுத்து உதவவில்லை. நாங்கள் அவர்களைத் தண்டிக்கப் போகிறோம்.
நாங்கள் தவறு செய்திருந்தால் மன்னித்து விடுங்கள்.
உங்களுக்கு மன்னிப்பா? உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?
நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் மரணம் அடைய வேண்டும்.
அப்படியா!
© JINGLE BELL CREATIONS
உங்கள் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக எல்லா வளங்களும் பெற்று வாழ்வீர்கள்.
உடனே அந்த வீட்டின் கூரை தங்கமாக மாறியது. மிக அழகான கோயிலாக காட்சியளித்தது.
இந்த இரக்கமற்ற கிராமம் தண்ணீருக்குள் மூழ்கி விடும்.
ஜீயஸ், ஹெர்ம்ஸ் இருவரும் கிளம்பினர். வயதான தம்பதிகள் நீண்ட காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.



கோகுலம்
போஸ்டர்
WEST INDIES



லாரா
400
நன்றி: தி ஹிந்து



தபாலின் கதை!

நீங்கள் எப்போதாவது உங்கள் கடிதம் எப்படி உங்கள் நண்பர்களுக்குச் சென்று சேர்கிறது என்று நினைத்ததுண்டா?

முற்காலத்தில் நாட்டை ஆண்ட மன்னர்கள், செய்திகளை அவர்கள் நாட்டிலிருந்து அண்டை நாட்டுக்கு அனுப்புவதற்கு, பழக்கப்படுத்திய புறாக்களைப் பயன்படுத்தினர். புறாக்களின் காலில் செய்திகளடங்கிய துணிகளையோ, ஓலைகளையோ கட்டி, பறக்க விடுவார்கள். இது எதிரி நாட்டினருக்குத் தெரிந்து, புறாக்களை அழித்து செய்திகளை அறிந்து கொண்டனர்.

பின்னர் இதற்காக போர் வீரர்கள் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் மற்றவர்களின் செய்திகளை அடுத்த நாட்டுக்கு எடுத்துக் கொண்டு ஓடுவார்கள். கடல் வழியாகவும், மலை மேல் ஏறி இறங்கியும், காட்டு வழிகளிலும் கொடிய மிருகங்களுக்கிடையேயும், ஆற்றங்கரையோரமாகவும், ஊர்களுக்குள்ளும் ஓடுவர். அவர்களுக்கு ஆங்கிலத்தில் 'மெயில் ரன்னர்' என்று பெயர். பின்னர் அவர்கள் அண்டை நாட்டுச் செய்திகளை அந்தந்த நாட்டினரிடம் ஒப்படைத்து விட்டு, அவர்களிடமிருந்து இவர்கள் நாட்டுச் செய்திகளைப் பெற்றுக் கொண்டு, தன் நாட்டுக்குத் திரும்பவும் ஓடி வருவார்கள். இப்படித்தான் செய்திப் பரிமாற்றம் தொடங்கியது.

நம் இந்தியாவில் 'அலாவுதீன் கில்ஜி' என்ற மொகலாய மன்னன் போர் முனைகளிலிருந்து செய்திகளைக் குதிரை வீரர்கள் மூலமாகப் பெற்று அனுப்பிக் கொண்டிருந்தார்.

பின்னர் வந்த ஷெர்ஷா என்ற மன்னன் வங்காளத்திலிருந்து சிந்து வரை சுமார் 2000 மைல் தூரத்துக்குச் செய்திகளைக் கொண்டு வரவும், அனுப்பவும் ஏதுவாக பாதைகள் மற்றும் சாலைகளை உருவாக்கினான். அவனுடைய ஆட்சிப் பரப்பு முழுமைக்கும் குதிரை வீரர்கள் மூலம் செய்தி அனுப்ப ஏற்பாடு செய்தான். இரண்டு குதிரை வீரர்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.


இதற்குப் பின்னர் வந்த பேரரசர் அக்பர் இந்த முறையை பாலைவனப் பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தினார். ஒட்டகங்கள் மூலமாக இவர் செய்திகளை அனுப்பி, பெற்றுக் கொண்டார்.

மைசூரை ஆண்டு வந்த 'ராஜா சிக்கு தேவா' என்ற மன்னன், அவனுடைய ஆட்சிப் பரப்புக்குண்டான எல்லா இடங்களுக்கும் 1672ல் செய்திகள் பரிமாற்றம் மற்றும் தொடர்புக்கு வழி செய்தான்.

அதன் பின்னர் 1688ல் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு இந்தியாவுக்குள் வந்த கிழக்கிந்திய கம்பெனி ஆங்கிலேயர்கள், செய்திப் பரிமாற்றத்தை சென்னை, மும்பை மற்றும் கல்கத்தா நகரங்களுக்கும் விரிவுபடுத்தினர். சென்னை மற்றும் மும்பை நகரங்களில் செய்திப் பரிமாற்றம் செய்ய அலுவலகங்கள் திறந்தனர். மேலும் கடிதப் போக்குவரத்துக்கு ஏற்பாடும் செய்தனர்.

நாடு முழுவதும் சிறிய தபால் அலுவலகங்கள் தோன்றின.

1766ல் ராபர்ட் கிளைவ் என்பவர் அரசாங்கச் செய்திகள் பரிமாற்றத்தினை மட்டுமே செய்து வந்த தபால் அலுவலகங்களை, மக்கள் நலனுக்காகவும் விரிவுபடுத்தினார். 1774ல் ஒவ்வொரு கடிதத்துக்கும் இரண்டு அணாக்கள் 100 மைல் தூரக் கட்டணமாக





வசூலிக்கப்பட்டன. இதற்காகவே முதன்முதலாக இரண்டு அணா மதிப்புள்ள செப்பு வில்லைகள் தயாரிக்கப்பட்டன.

1837ல் தபால் அலுவலகச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இதன் மூலம் தனியார் தபால் வேலைகளைச் செய்வது தடை செய்யப்பட்டது.

தபால் தலைகள் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், தபால் கட்டணங்கள் தபால்களை அனுப்புபவரிடமிருந்தோ, அல்லது பெறுபவரிடமிருந்தோ வசூலிக்கப்பட்டன. அந்தக் கடிதம் செல்லும் தூரத்தைப் பொறுத்து கட்டணங்கள் வசூலிக்கப்பட்டன.

அந்தக் காலத்தில் இந்த முறை, கட்டணம் செலுத்தப்பட்டது, கட்டணம் செலுத்தப்படாதது (பெய்ட் / அன்பெய்ட்) என்று அழைக்கப்பட்டது. கடிதத்தில் முத்திரையும் இடப்பட்டது. கடித உறைகள் (என்வலப்) கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்துக்கு வரும்வரை கடிதங்கள் அப்படியே மடித்து முத்திரையிடப்பட்டு, பின் பக்கத்தில் முகவரி எழுதப்பட்ட நிலையில்தான் அனுப்பப்பட்டு வந்தன.



1837ல் ரோலண்ட் ஹில் 'தபால் அலுவலக முறை' என்ற கையேடு ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் கட்டணம் செலுத்தப்பட்டது என்ற வாசகம் அச்சிடப்பட்ட தபால் உறைகளைத் தபால் அனுப்புவதற்குப் பயன்படுத்தலாம் என்று ஆலோசனை கூறியிருந்தார். முடிவில் 1840ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ந் தேதி தபால் கட்டணம் செலுத்தப்பட்டது என்று அச்சிடப்பட்ட கடித உறைகள் வெளி வந்து பயன்படுத்தப்பட்டன. இந்தக் கால கட்டத்தில்தான் ஒவ்வொரு தூரத்துக்கு ஒவ்வொரு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டது.

ரோலண்ட் ஹில் மற்றும் மெஸர்ஸ் பெர்க்கின்ஸ், பேங்கன் கம்பெனியினரின் கூட்டு முயற்சியால் உலகின் முதல் தபால் தலையான 'பென்னி பிளாக்' 1840 ஆம் ஆண்டு மே மாதம் 6ந் தேதி வெளியிடப்பட்டது.

இந்தியாவில் சிந்து மாகாண ஆணையராக இருந்த 'பொ்டில் பிரைரே' 1852ல் காகிதத்திலான தபால் தலைகளை வெளியிட்டார். இந்தத் தபால் தலைகள் இந்தியாவில் மட்டுமின்றி ஆசியாவிலேயே முதலாவதும் ஆகும்.

1856 முதல் 1926 வரை இந்தியாவின் அனைத்து தபால் தலைகளும் லண்டன் நகரில் உள்ள 'தாமஸ் தே லா ரூ' கம்பெனியரால் அச்சிடப்பட்டன. 1926ல் இந்தியா பாதுகாப்பு பிரஸ் என்ற நிறுவனம் நாசிக்கில் தொடங்கப்பட்டு, தபால் வில்லைகள் அச்சிடப்பட்டன.

வான் வழியாக கடிதங்களை முதன் முதலாக அனுப்பிய நாடு இந்தியாதான். காமன் வெல்த் நாடுகளில் 1929ல் முதன் முதலாக விமானத் தபால் தலைகளை வெளியிட்டதும் இந்தியாதான்.

- கலிவரதன்





தெறித்து விழுந்த

நாராயண சூரி - லக்கம்மா தம்பதிகளுக்குத் திருமணமாகி நெடுங்காலம் திருப்பதி ஏழுமலையானை வேண்டிப் பிறந்தவர் அன்னமய்யா. லக்கம்மா சோறூட்டும் போதெல்லாம் வேங்கட நாதனின் கதையையும் சொல்லுவாள். அதனால் அன்னமய்யாவுக்கு திருப்பதி ஸ்வாமி மேல் அபார பக்தி.

திருப்பதியிலிருந்து 104 கி.மீட்டர் தூரத்தில் உள்ள தாள்வாக்கம் கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வந்தார் அன்னமய்யா. ஒரு நாள் ஆடு, மாடுகளுக்குப் புல் அறுத்துக் கொண்டிருந்தார்! 'கோவிந்த, ஹரி கோவிந்த' என்ற பஜனை சத்தம் கேட்டது.

''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''திருப்பதிக்கு'' என்றார் ஒருவர்.

அவ்வளவுதான்! அரிவாளைக் கீழே போட்டார். பஜனை நாமாவளிகளைச் சொல்லிக் கொண்டு அவர்கள் பின்னே சென்றார். அப்போது அன்னமய்யாவுக்கு ஏழு வயது!

சிறுவன் தானே! பசியும், நடந்த அலுப்பும் ஒரு பாறையில் இளைப்பாற வைத்தது. சிறிது நேரத்தில் உறங்கி விட்டார்!

யாரோ தட்டி எழுப்பினார்கள். எழுந்தார். அவர் அருகில் அமர்ந்த அந்த மங்கை ருசியான பொங்கலை ஊட்டினாள்.

''குழந்தாய்! இந்த மலை சாளக்கிராமம் கற்களால் ஆனது. இதில் செருப்புப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது'' என்று சொன்னாள். அத்துடன் எப்படி போக வேண்டும்? என்று வழியும் காட்டி மறைந்தாள்.

வந்தது பத்மாவதித் தாயார் என்று புரிந்து கொண்டார். செருப்புகளைக் கழற்றினார். மலையேறி முடிப்பதற்குள் நூறு பாடல்களைப் பாடி விட்டார். எல்லாம் தாயாரின் மகிமையைக் கூறுவன! கடைசியில் இவ்வளவும் நீ வேங்கடேசனைக் கை பிடித்ததாலல்லவா!'' என்று பூர்த்தி செய்தார்.

அதற்கு 'வேங்கடேச சதகம்' என்று பெயர். வராக தீர்த்தத்தில் குளித்தார். அன்று ஏகாதசி. சன்னதிக்குச் சென்றால் கதவு சார்த்தியிருந்தது. 'தரிசனம் கிடைக்காதா?' என்று ஒரு பாடலைப் பாடி உருகினார். கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. அர்ச்சகர் பிரமித்தார்!

கண விஷ்ணு என்று ஒரு யோகி. அவர் கனவில் சென்று, ''என் பக்தன் அன்னமய்யா வந்திருக்கிறான். அவனுக்கு முத்ரதாரணம் செய்துவை'' என்றார் திருமால்.

கண விஷ்ணு அன்னமய்யாவைத் தேடிக் கண்டுபிடித்து இருதோள்களிலும் சங்கு, சக்கர ரேகை பதித்தார். தேகமெங்கும் பன்னிரண்டு நாமங்களையும் எழுதி 'அன்னமாச்சார்யா' என்ற தீட்சா நாமமும் சூட்டினார்.

திருமலையில் எட்டு ஆண்டுகள் பாமாலை புனைந்து ஏழுமலையானுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

பெற்றோர் தேடி வந்து அழைத்தனர். வேங்கடேசனும் கனவில் வந்து உத்தரவளித்தார்.


பெற்றோர் விருப்பப்படி திருமலம்மா, அக்கலம்மா என்ற இரு மங்கையரை விவாகம் செய்து கொண்டார். ஆனாலும் மாதத்தில் பாதி நாள் திருமலைக்கு வந்து விடுவார்.

நரசிம்ம ராவ் என்கிற பெரிய மனிதர். தன்னோடு வந்து தங்கும்படி அன்னமய்யாவைக் கெஞ்சினார். அன்னமய்யா அவர் வேண்டுகோளை ஏற்றார். அன்னமய்யா நரசிம்மரோடு தங்கிய காலத்தில் நரசிம்மராவுக்கு 'கிடுகிடு'வெனப் பதவி உயர்ந்தது.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் உள்ள பெனுகொண்டா கோட்டைக்கு மன்னரானார் நரசிம்மராவ். பதவி அகந்தையைத் தந்தது. ''என்மீது ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்றார்.

இரும்புச் சங்கிலி

ஆர்.பொன்னம்மாள்



''திருவேங்கடவனைப் பாடும் நா நரஸ்துதி செய்யாது'' என்று கம்பீரமாகச் சொன்னார் அன்னமாச்சார்யா.

நிறைந்த சபையில் தன் பேச்சை மறுத்து விட்டாரே என்று அரசர் சினம் கொண்டார். இது மற்றவர்களுக்கு எகத்தாளமாகி விடுமே என யோசித்தார்.

''இரும்புச் சங்கிலியால் கட்டி சிறையில் அடையுங்கள். அப்போது தான் இவர் கொழுப்பு அடங்கும்'' என்றார்.

சிறையில் ''நான் சொன்னது தவறா?'' என்று அன்னமய்யா உருகிப்பாட இரும்புச் சங்கிலிகள் தெறித்து விழுந்தன.

இந்த அதிசயத்தை காவலர்கள் ஓடிப் போய் மன்னரிடம் தெரிவித்தனர். ''சரியாகப் பூட்டியிருக்க மாட்டார்கள்! பாடினாராம்! சங்கிலி அறுந்ததாம்! மறுபடி பூட்டுங்கள். எப்படி அவிழ்கிறதென்று பார்க்கலாம்!'' என்று சிறைக்கு வந்தார். காவலர்கள் நன்றாகக் கட்டியிருக்கிறார்களா என்று சோதித்தார்.

''மறுபடி பாடு. மாயவன் சங்கிலியை அவிழ்க்கிறானா என்று பார்க்கலாம்'' என்றார்.

மீண்டும் அதே பாடலை அன்னமாச்சார்யா பாட சங்கிலிகள் 'மடார், மடாரென'த் தெறித்தன. வேரற்றமரம் போல் குரு தேவர் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினார் நரசிம்மர்.

அன்றோடு ஏழுமலைக்கு வந்து விட்டார். மொத்தம் 32000 பாடல்களைப் பாடியிருக்கிறார். சுப்ரபாத சேவையை ஏற்படுத்தியவர் இவரே. 'டோலோற்சவம்' என்ற ஊஞ்சல் சேவையையும் இவரே தொடங்கினார். ஏகாந்த சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.

புரந்தர தாசரை இவர் சந்தித்த போது, ''இறைவன் நாட்டியத்தைப் பார்த்த பாக்கியவான் நீங்கள்'' என்று அன்னமாச்சார்யா அணைத்துக் கொள்ள, ''தாயார் தன் கையால் அன்னமூட்டப் பெற்ற அதிர்ஷ்ட சாலியாயிற்றே'' என்று புரந்தரர் புளகித்தார்.

ஒரு சமயம் ஸ்ரீ தேவி, பூமா தேவி சகிதமான ஸ்ரீனிவாச விக்ரகத்தைக் காணாமல் சோகமாகி விட்டார். ''ஒளிந்து கொண்டாயோ?'' என்று அன்னமாச்சார்யா கதறிப் பண்ணிசைக்க விக்ரகங்கள் கிடைத்தன.

இன்றும் அவற்றை திருப்பதியிலிருந்து 14 கி.மீட்டர் தொலைவிலுள்ள ஸ்ரீனிவாச மங்காபுரம் கோயிலில் மூலஸ்தானத்தில் காணலாம். ஓர் அடி உயரமுள்ள வெண்கல விக்ரகம்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 தி	■	ம்	ல	2 ழ	■	3 கு	ட	4 கு
ரு	■	க	■	ஞ்	■	றி	■	ர
ப்	■	ய	■	சு	■	ஞ்	■	ங்
5 தி	ரு	6 வை	7 யா	று	■	சி	ச்	8 கு
■	■	■	ழ்	■	9 ஆ	■	■	■
ம்	ன	10 தி	■	11 ச	ம்	12 ப	வ	ம்
ன	■	ல	■	த்	■	ரு	■	க
க	■	க	■	த	■	த்	■	ன
13 வா	ன	ம்	■	ம்	ட	14 தி	■	15 கா

கற்றாழைக்குள் இருக்கும் பாம்பு!




விடுகதைப் பக்கம்

I 1. இருட்டுக்குள் நடமாடுபவன், குருட்டு பட்டம் பெற்றவன் - அவன் யார்?

2. முதுகு உண்டு முகம் இல்லை; நாலு கால் உண்டு நடப்பாரில்லை - அவர் யார்?

3. ஒல்லி மனிதன், ஒற்றைக் காலன், 'சுருக்'கென குத்துவான் - அவன் யார்?

4. ஓடுவான் நிற்கமாட்டான், ஒளி தருவான், ஒளிவான், வெளிவருவான் - அவன் யார்?





5. கல்லிலே காய்க்கும் பூ, தண்ணீரில் மலரும் பூ - அது என்ன?

6. காடெங்கும் சுற்றி வரும் கறுப்பழகி, காதுகளைக் கானத்தில் குளிர வைப்பாள் - அவள் யார்?

- ஆர். அபிநயா,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

II 1. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் - அவன் யார்?



2. தரையில் இருப்பான், தண்ணீரில் மிதப்பான் - அவன் யார்?

3. கட்டத் தெரியாதவனுக்கு எக்கச்சக்க வரி - அவன் யார்?

4. அவன் கட்டினால் இனிக்கும், அவன் கொட்டினால் வலிக்கும் - அவர்கள் யார்?



- ஆர். ராஜி
நல்லூர்

III 1. ஒட்டப்படும் குட்டிப் படங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விலை - அது என்ன?

2. ஊருக்குப் போவதற்காக உண்டியலில் விழுவான் ஒருவன் - அது என்ன?

3. அவசரமாய் வருவான், அழுகையோ சிரிப்போ தருவான் - அவன் யார்?

4. வண்ணப் பெண் என்றாலும் வைக்கும் பொட்டு கறுப்புதான் - அது என்ன?



5. குத்துப்பட்டாலும் கிழிக்கப்பட்டாலும் குசலம் விசாரிப்பான் - அவன் யார்?

- எஸ். கவிதா,
திருநெல்வேலி

IV 1. கத்தாழைக்குள் இருக்கும் கண்ணாடிப் பாம்பு, முன்னாடி வந்து சேதி சொல்லும் பாம்பு - அது என்ன?

2. தங்க நிறம் கொண்ட பாப்பா குளிச்ச பின்னே கறுப்பு நிறமாயிடுவாள் இந்தப் பாப்பா - அவள் யார்?

3. ஓடுற குதிரைக்கு விலா எல்லாம் ஓட்டை - அது என்ன?

- வி.எஸ். கவின்,
மூன்றாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர்
மெட்ரிகுலேசன் பள்ளி, சேலம்





விடைகள்:

I 1. வௌவால் 2. நாற்காலி 3. தையல் ஊசி 4. நிலா 5. சுண்ணாம்பு 6. குயில்

II 1. கண்ணாடி 2. படகு 3. வரிக்குதிரை 4. தேன் - தேள்

III 1. தபால் தலை 2. தபால் பெட்டி, கடிதம் 3. தந்தி 4. தபால் முத்திரை 5. கடிதம்

IV 1. நாக்கு 2. நெருப்பு 3. ரயில்

மஞ்சள் நிறமும், சிவப்பு நிறமும் கலந்த தனது இனிய புன்னகையால் கதிரவன் அவ்விடத்தைத் தழுவினான். காலை நேரக் குரல் வந்ததும் பறவைகள் அனைத்தும் ஒன்றையொன்று எழுப்பின. மிகுந்த அன்புடன் அன்னையை அணைத்துக் கொள்வது போல பனியானது அம்மலையை வாரி அணைத்துக் கொண்டிருந்தது. சூரியன் அதனைக் கண்டதும், வெட்கம் வந்தது போலும்! மெதுவாக விலகியது. மலை உச்சியிலிருந்த சந்தன மரத்தில் குருவியொன்று, தன் குஞ்சுகளுக்கு மிகவும் நுண்மையாகப் 'பறத்தல்' என்ற பாடத்தினைப் புகட்டிக் கொண்டிருந்தது. சுற்றிலும் இருந்த புதர்களில் ரோஜாக்களும், முல்லைகளும், மல்லிகளும் இரவு முழுவதும் தம்மை அலங்கரித்துக் கொண்ட அழகினை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. காலை நேரக் குளிர்க்காற்று, அம்மலையையும் அதன் அருகிலிருந்த மரங்களையும் 'நலமா?' எனக் கேட்டு மெல்லத்

பார்த்தேன், ரசித்தேன்!



தலையில் தடவிக் கொடுத்துவிட்டு அதிகாலையில் அமுதராகம் பாடிக் கொண்டிருந்த அருவியுடன் உரையாடச் சென்றது. இதற்கிடையில் கையில் எழுதுகோலுடனும், காகிதத்துடனும் மரத்தடியில் அமர்ந்திருந்தேன். இக் காட்சியைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் என் மனம் சரமாரியாகக் கவிதைகளைப் பொழிந்து தள்ளியது. ஆனால், என் கைகளோ வார்த்தைகளால் இவ்வழகுக்கு வேலி போட்டு விடக் கூடாது என்பது போல் மௌனமாய் இருந்தன.

- ரா. நேத்ரா, பதினோராம் வகுப்பு,
சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி,
கிழக்குத் தாம்பரம், சென்னை

கோடை விடுமுறைப் போட்டி-II

உலக அதிசயங்களைக் கண்டுபிடியுங்கள்!

உலக அதிசயங்களாகக் கருதப்படும் இடங்கள் பல இந்தப் படத்தில் உள்ளன. குறைந்தது 10 இடங்களின் பெயர்களை எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 10 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 15.6.2004



ஆசிரியர்,


கோகுலம்,

47-NP, ஜவாஹர்லால்

நேரு சாலை,

ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 097



மருந்துகளைக் குறிப்பிட்ட

ஹலோ சுகமா?

● சி. வானவராயன், நாகர்கோவில்


? 'வெள்ளெழுத்து' என்பது என்ன நோய், டாக்டர்? அதற்கு என்ன சிகிச்சை?

! வயது ஆக ஆக நம் உடலில் பல மாற்றங்கள் உருவாவது இயற்கை. எடுத்துக் காட்டாக தலைமுடி நரைக்கிறது. முகத்தில் சுருக்கங்கள் விழுகின்றன. இவை போல நமக்கு நாற்பது வயது ஆகும்போது கண்ணில் உள்ள விழியாடியின் இறுக்கம் குறையத் தொடங்குகிறது. இதனால் விழியாடி தளர்வடைகிறது. விளைவு, பார்வை குறைகிறது. குறிப்பாக நாளிதழ்களைப் படிப்பதற்கு, ஊசியில் நூல் கோர்ப்பதற்கு மற்றும் இது போன்ற கண்ணிற்கு மிக நெருக்கமான வேலைகளைச் செய்வதற்கு சிரமம் உண்டாகும். இதைத்தான் 'வெள்ளெழுத்து' என்கிறோம். தகுந்த திறனுள்ள கண்ணாடியை அணிந்து கொள்வதன் மூலம் இந்தக் குறையைச் சரி செய்து விடலாம்.

● பெ. மல்லிகா, கல்லிடைக்குறிச்சி.

? மனநோய் வருவது ஏன்?

! மனநோய் வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை இவை: 1. ஒரு குடும்பத்தில் மனநோயால் பாதிக்கப்பட்ட நபர் இருந்தால் பரம்பரை காரணமாக அவருடைய வாரிசுகளுக்கு மனநோய் வரக்கூடிய வாய்ப்புகள் அதிகம். 2. மூளையில் அடிபடுதல், கட்டி உருவாதல், ரத்த ஓட்டம் குறைதல், கட்டுப்படாத வலிப்பு நோய் போன்றவற்றால் மன நோய் வரலாம். 3. நெடுநாள் மதுப்பழக்கம், போதை மாத்திரைகள் மற்றும் போதை ஊசிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் மனநோய் வரும். 4. வீட்டுச்சூழல் அல்லது பணிச்சூழல் தங்களுக்கு இசைவாக இல்லாதபோதும் மனநோய் வருவதுண்டு. எடுத்துக்காட்டாக, வீட்டில் ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருப்பது அல்லது சந்தேகப்படுவது நாளடைவில் மனநோயை உண்டாக்கும். 5. மன அழுத்தம், மனக்கவலை, எதிர்பாராத இழப்புகள், துரோகம், அன்பிற்கு ஏங்குதல், ஏமாற்றம் போன்றவற்றாலும் மனநோய் ஏற்படும்.




● வ. சத்தியசீலன், காரைக்கால்.

? டாக்டர்கள் தரும் மருந்துகளைக் குறிப்பிட்ட நேரத்தில்தான் சாப்பிட வேண்டும் என்பது அவசியமா? என்ன காரணம்?

! டாக்டர் தரும் மருந்து உடலில் எங்கு ஏற்கப்படுகிறது, எங்கு செயல்படுகிறது, எவ்வளவு நேரம் செயல்படுகிறது, எங்கிருந்து வெளியேறுகிறது என்பதைப் பொறுத்து இந்த மருந்தைச் சாப்பிட வேண்டிய நேரம் தீர்மானிக்கப்படுகிறது. இன்னொன்று, 24 மணி நேரத்தில் நம் உடல் உறங்கி விழித்து, சாப்பிட்டுச் செரிமானித்து, மலம் கழித்து ஒரு சுழலும் வாழ்க்கையை நடத்துகிறது. அப்போது நம் உடலுறுப்புகள் குறிப்பிட்ட நேரங்களில் தீவிரமாகப் பணியாற்றும். சில நேரங்களில் ஓய்வெடுக்கும். மருந்து எந்த உறுப்பில் ஏற்கப்பட வேண்டுமோ அந்த உறுப்பின் பணிநேரத்தைப் பொறுத்தும் அதைச் சாப்பிட வேண்டிய நேரம் தீர்மானிக்கப்படும். ஆகையால், மருந்துகள் உடலில் சரியாகவும் முழுமையாகவும் செயலாற்றுவதற்கு நாம் அம்மருந்துகளை எடுத்துக் கொள்ளும் நேரமும் முக்கியமாகிறது.

நேரத்தில்தான் சாப்பிட வேண்டுமா?



● பு.சி. சங்கர், சென்னை - 18.

? ஹீமோஃபிலியா என்பது என்ன டாக்டர்? இதற்கு என்ன சிகிச்சை உள்ளது?

! ஹீமோஃபிலியா என்பது ஒரு ரத்தக் கசிவு நோய். ரத்தம் உறைதலில் ஏற்படும் கோளாறு காரணமாக இந்நோய் வருகிறது. நம் ரத்தம் உறைவதற்கு 13 வகைக் காரணிகள் உள்ளன. இவற்றில் 8, 9, 11வது உறை பொருள்களில் ஏதேனும் ஒன்று குறைவாக இருந்தால் ஹீமோஃபிலியா ஏற்படும். இது ஒரு பரம்பரை நோய். மரபணு குறைபாடு காரணமாக வருகிறது. இது பெரும்பாலும் ஆண்களைத்தான் பாதிக்கும். இந்த நோய் உள்ளவர்களுக்கு ரத்தநாளத்தில் அடிபட்டால் ரத்தப்போக்கு மிகுதியாக இருக்கும். இதனால் உயிரிழப்பு உண்டாகின்ற வாய்ப்பு அதிகரிக்கும். பாதிக்கப்பட்ட நபருக்குத் தேவைப்படும் ரத்த உறைபொருளை உடனடியாக ரத்தத்தில் செலுத்தினால் ஓரளவிற்கு ரத்தப்போக்கு நிற்கும். இந்தியாவில் இப்போதுள்ள சிகிச்சைமுறை இதுதான். மேல்நாடுகளில் மரபணு சிகிச்சை ஆராய்ச்சி நிலையில் உள்ளது.

புதிர் இங்கே! விடை கீழே!

1. நுனிநாக்கில் உணர முடியாத சுவை எது?

அ. உப்பு

ஆ. புளிப்பு

இ. இனிப்பு

2. மனித உடலின் தொடு உணர்ச்சி அதிகமாக உள்ள உறுப்பு எது?

அ. கைவிரல்கள்

ஆ. முதுகு

இ. உதடு

3. கிருஸ்துமஸ் நோய் என்று அழைக்கப்படுவது எது?

அ. அனீமியா

ஆ. ஹீமோஃபிலியா

இ. கிளப்டோமேனியா

4. சுவையை உணரும் உறுப்பைப் பாதங்களில் கொண்டுள்ளது எது?

அ. பட்டாம்பூச்சி

ஆ. தேனீ

இ. மண்புழு

5. டாக்டர்களைப் பார்த்து பயப்படும் நோய்க்கு என்ன பெயர்?

அ. ஹைட்ரோபோபியா



ஆ. ஆட்டோபோபியா

இ. அயட்ரோபோபியா

விடைகள்:
1. ஆ 2. இ 3. ஆ 4. அ 5. இ

டாக்டர் கு.கணேசன்


4 கிளித் தலை இளவரசி!

கதை: குறும்பலாப்பேரிப் பாண்டியன்

படம்: லலிதா




செங்கதிர் அரசரும் அரசியும் நந்தவனத்தில் அமர்ந்திருந்தனர். இசைவேந்தன் மீண்டும் பழைய நிலைக்கு வந்தான்.
வணக்கம் அரசே! என் பெயர் இசைவேந்தன். பொன்னகர மன்னர் அனுப்பியிருக்கிறார்.
அப்படியா! என்ன விஷயம்?
மந்திரயாழை மீட்டு, இளவரசியைக் காப்பாற்ற வந்திருக்கிறேன் அரசே!
மந்திர யாழை மீட்க ஆள் வந்திருப்பதே ஆச்சர்யத்தைத் தருகிறது!
செங்கோடன் என்ற மந்திரவாதிதான் எங்கள் மகளின் மந்திர யாழைத் திருடிச் சென்றவன்.
அவன் மிகவும் பொல்லாதவன்.


செங்கோடனுக்கு இசையில் ஈடுபாடு அதிகம். உலகில் உள்ள அரிய இசைக் கருவிகளை எல்லாம் திருடி தன் மாளிகையில் வைத்திருக்கிறான்.
அவனை வெல்வது சுலபமல்ல.
நானும் மந்திரங்களைக் கற்றிருக்கிறேன் அரசே!
அவனை மந்திர சக்தியால் வெல்வது கடினம். வேறு வழியில் முயற்சி செய்.
செங்கோடன் எங்கிருக்கிறான்?
தென்மேற்குத் திசையில் ஆயிரம் மைல் தொலைவில் சுண்ணாம்புத் தீவு உள்ளது. அந்தத் தீவைச் சுற்றிலும் சுண்ணாம்பு நீர் கொதித்துக் கொண்டிருக்கும். வெப்பம் அதிகமாக இருக்கும்.
யாராவது சென்றால் வெந்து இறந்து விடுவார்கள். நீ எப்படி?
என் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது அரசே! வருகிறேன்.



யாழினியைப் பார்த்துவிட்டு போகலாமே!
யாழுடன் வந்து இளவரசியைச் சந்திக்கிறேன் அரசே!
அரசே, விடை கொடுங்கள்...
வெற்றியுடன் திரும்பி வா.
மீண்டும் குருவியாக மாறினான் இசைவேந்தன்.
ஏன் இசைவேந்தா உருமாறினாய்?
தங்கள் காவலர்கள் என்னை அனுமதிக்கவில்லை.
இது என் அரச முத்திரை. இதை வைத்துக் கொள்.
நன்றி அரசே! வருகிறேன்.
கடற்கரைக்கு வந்த உடன் குருவி மீண்டும் இசைவேந்தனாக மாறியது.
கொதிக்கும் சுண்ணாம்புத் தீவுக்கு எப்படி போவது?
(தொடரும்)



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி




இந்தப் போட்டி நீண்ட காலமாக வந்து கொண்டிருக்கிறது. நிறையப் பேர் பரிசு பெற்றிருக்கிறார்கள். பரிசு கிடைக்காதவர்கள் மனம் தளராமல் போட்டியில் பங்கு பெறுங்கள். நிச்சயம் பரிசு கிடைக்கும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குச் சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பத்துடன், முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி **20.06.2004.**




கிரேக்கம்


1. தலைநகரம் ________
2. முக்கிய இடங்கள் ________, ________
3. கரன்ஸி ________
4. மொழி ________
5. நவீன ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்ட ஆண்டு ________
6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097



படத்தை நிறைவு செய்யுங்கள்!



இந்தப் படத்தில் 'ம' என்ற எழுத்தில் துவங்கும் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!



அன்று கதறினேன்;

என் ஆசிரியர்

எல்லாம் நன்மைக்கே!

நான் ஆறாவது படிக்கும்பொழுது நடந்த சம்பவம் இது. அருணாச்சலம் என்ற தமிழ் ஆசிரியர், வீட்டுப் பாடம் எழுதி வரச் சொன்னார். நானும் எழுதிக் கொண்டு



சென்றேன். கையெழுத்துதான் தாறுமாறாக இருந்தது. என்னாலேயே மறுமுறை படித்துப் பார்க்க முடியவில்லை. எனது நோட்டைப் பார்த்தவர் என்னை அருகே அழைத்தார். "உன் அக்கா நன்றாகப் படிப்பாள். கையெழுத்து குண்டு குண்டாக அழகாக இருக்கும்; நீ என்னடான்னா கடமைக் குன்னு எழுதி வந்திருக்கே. கையை நீட்டு" என்றார். கையை நீட்டினேன். "உள்ளங் கையைக் காட்டாதே, திருப்பிக் காட்டு" என்றார். திருப்பிக் காட்டினேன். கையில் வைத்திருந்த கோலால் ஓங்கி அடிக்க, நான் கையை இழுத்துக் கொண்டேன். அடி தவறியது. கையெழுத்து சரியில்லாத கோபம், கையை இழுத்துக் கொண்டது வேறு கோபம். இரண்டும் சேர மறுபடியும் என் கையை நீட்டச் சொல்லி என் கை விரல் களைப் பிடித்துக் கொண்டு 'படபட'வென அடித்தார். கதறினேன், துடித்தேன். வகுப்பே என் வேதனையைப் பார்த்து துடிதுடித்தது.

"இனிமேல் ஒழுங்கா நிறுத்தி அழகா எழுதி வா" என்றார். அன்றிலிருந்து எழுதப் பழகிக் கொண்டேன். இன்றைக்கு என் கையெழுத்தைப் பார்ப்பவர்கள் எல்லாம் பெரிதும் பாராட்டுகிறார்கள். என் கையெழுத்தைப் பிறர் பாராட்டும்பொழுது அந்த ஆசிரியரும், அந்த நிகழ்ச்சியும் என் மனக்கண் முன் நிழலாய் ஓடும். கண்டிப்பாக அன்று அவர் நடந்து கொண்டதால்தான் இன்று என்னால் அனைவரிடமும் பாராட்டைப் பெற முடிகிறது. ஆசிரியர் திட்டினாலோ, அடித்தாலோ வருத்தப்படும் மாணவர்களும், பெற்றோர்களும் அவர்கள் நமது நன்மைக்குத் தான் செய்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.


- க. முருகதாஸ்,
மேல் அழிஞ்சப்பட்டு,
கடலூர்

பெயர் சொல்லி அழைப்பார்!

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த எல்லா ஆசிரியர்களையுமே எனக்குப் பிடிக்கும். ஆனாலும் எனக்கு மிகவும் பிடித்த ஆசிரியர் எங்களுக்குத் தமிழ் ஆசிரியராக இருந்த நயினார் முகம்மது அவர்கள்தான். எப்போதும் அவர் தூய வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, சிரித்த முகம், கலகலப்பான பேச்சு என்று இருப்பார். தமிழ் வகுப்பு



ஒன்று..?



என்றாலே மாணவர்களான எங்களுக்கு அலாதியான உற்சாகம். பாடங்கள் மட்டுமல்லாமல் ஒழுக்க விதிமுறைகளைச் சின்னஞ்சிறு கதைகள் போலச் சொல்லுவார். தமிழ்ப் பாடத்தில் மாணவர்கள் எப்போதும் அறுபது மார்க் குறைந்து வாங்கியது இல்லை! ஏழை மாணவர்கள் சிலருக்கு அவ்வப்போது புத்தகம், நோட்டு, பேனா என அவர் சொந்தப் பணத்தில் வாங்கிக் கொடுப்பதும் உண்டு! வழியில் தம் மாணவர்கள் யாரையாவது சந்தித்தால் சரியாக அந்த மாணவன் பெயரை ஞாபகம் வைத்திருந்து அவன் பெயரைக் கூறி, கூப்பிட்டு நலம் விசாரிப்பார்.

- எஸ். பொன்னுசாமி,
ஏரிப்பாளையம்,
உடுமலைப்பேட்டை

வரம்!


நான் மிகவும் நேசிக்கும் ஆசிரியை ஆண்ட்ருஸ் மேரி. நான் உயர்நிலைப் பள்ளிக்கு வந்தபின், ஆறாம் வகுப்பில் என்னை வகுப்புத் தலைவி ஆக்கியவர் அவரே. அதுவேதான் எனக்கு ஓர் உந்துதலாக அமைந்தது. அதன்பின் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும், வகுப்புத் தலைவியாக இருப்பதென்பது ஒரு வாடிக்கையாகவே அமைந்துவிட்டது. பின்பு பத்தாம் வகுப்பில் எனது அறிவியல் ஆசிரியையாக அவர் அமைந்தது என் பாக்கியம். பத்தாம் வகுப்பில் நான் அறிவியலில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கியது முற்றிலும் அவரது பாடம் நடத்தும் விதத்தால்தான். பிள்ளைகள் மனதில் நன்றாகப் பதியும் வகையில் பாடம் நடத்துபவர். அறிவியல் மீது நேசத்தைத் தூண்டியவர். கணீர் என்ற குரல் வளம் பெற்றவர். பொதுஅறிவு பெரிதுமுள்ளவர். என் வகுப்புக்கு வராத காலங்களிலும்கூட அறிவியலில் பற்பல சந்தேகங்களைக் கேட்டு இருக்கிறேன். புத்தகங்களைப் புரட்டியும், பேராசிரியர்களைக் கேட்டும், மிகக் கடினமான சந்தேகங்களையும் தீர்த்துவிடுவார். அவர் என் ஆசிரியராக அமைந்தது, இறைவன் எனக்களித்த பெரும் வரம்.

- ந. பூஷாவளி,
சேலையூர்,
சென்னை

அவர் போலவே...

என் கணக்கு டீச்சரை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் பெயர் ஏ.பி. யமுனா. அவர் அனைவருக்கும் புரியும் வண்ணம் நடத்துவார். ஒவ்வொரு கணக்கிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டு கூறி நடத்துவார். இதனாலேயே அவரை அனைவருக்கும் பிடிக்கும். எங்களிடம் மிக மிக அன்பாக அணுகுவார். கோபம் காட்டவே மாட்டார். மிக வேகமாக கணக்குப் போடுவார். எனக்கு அவரைப் பார்க்கும்போது அவரைப் போலவே ஒரு ஆசிரியையாக வர வேண்டும் என்று தோன்றும்.

- ச. விக்னேஷ்வரி, எட்டாம் வகுப்பு,
சாவித்ரி வித்யாசாலா இந்து பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
திருச்சி





வரத்தால் பிரச்னைகள்

நீண்ட நாள் காட்டில் தவமிருந்த முனிவர் ஒருவர் மனிதர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என பார்க்க நாட்டுக்குள் வந்தார். அவர் பார்வையில் முதலில் தென் பட்டவன் பிச்சைக்கார மருது.

அவன் எதிரில் போய் நின்றார். "என்ன மருது, எப்படி வாழ்க்கை ஓடுது?" என்றார். "அதை ஏன் சாமி கேட்கற? நான் கேட்டா உதவி செய்யப் போறயா, என்ன?" என்றான். "கேள் மருது. என்னிடம் அபூர்வ சக்தி இருக்கிறது. உதவி செய்கிறேன்" என்றார் முனிவர்.

"சாமி, தினசரி நான் எடுக்கற பிச்சைக் காசு என் வயிற்றுப் பாட்டுக்கே பத்த வில்லை. நான் மட்டும் இல்ல, இதோ இங்க கோயிலாண்ட உட்கார்ந்து இருக்கறாங்களே எல்லார் நிலைமையும் அதுதான்" என்றான்.

"சரி, அதற்கு என்ன செய்யலாம் நீயே சொல்" என்றார் முனிவர்.


"சாமி, எனக்கு மட்டும் பணம் கிடைச்சதுன்னு வச்சிக்கோ, எல்லாருக்கும் வாரி கொடுப்பேன்; உதவி செய்வேன். யாரையும் கஷ்டப்பட விடமாட்டேன்" என்றான். "அப்படியா! நான் உனக்கு ஓர் உதவி செய்கிறேன். அதாவது நான் போன பிறகு உன் தோளில் மாட்டியுள்ள துணிப்பையைத் திறந்து பார். நான் மூன்று மாதம் கழித்து மீண்டும் வருகிறேன். அப்போது உன் நிலைமையைக் கூறு" என்றபடி சென்று விட்டார்.

சிறிது தூரம் சென்றதும் இரண்டாவதாக அவர் கண்களில் தென்பட்டான் பாஸ்கரன். "என்ன பாஸ்கரா, எப்படி வாழ்க்கை நடக்குது?" என்றார். "அதை ஏன் சாமி கேட்கறீங்க? ஜனங்கள் வறுமையில் வாடறாங்க. பசி, பட்டினியால சாகறாங்க. மனசு பொறுக்கல" என்றான். "சரி, இதற்கு என்ன செய்யலாம்? நீயே சொல் உனக்கு நான் உதவி செய்கிறேன்" என்றார் முனிவர்.

"சாமி, எனக்கு மட்டும் மணிமேகலையிடம் இருந்த அட்சய பாத்திரத்தைப் போல் ஒன்று கிடைத்தால் போதும். பசிக் கொடுமையை விரட்டி அறுசுவை உணவு கொடுப்பேன்" என்றான்.

"சரி, பாஸ்கரா இதோ பாத்திரம், நீ நினைக்கும் உணவு வகை இதில் உருவாகும். நீ தானதருமம் செய்" என்று கூறி சென்றார்.

மூன்றாவதாக அவர் கண்ணில் தென்பட்டவன் வைத்தியநாதன். "என்னமோ வாழ்க்கை ஓடுது சாமி. ஆனா ஒண்ணு உலகத்துல நோயாளிகள், விபத்துல ஊன மானவங்க பெருத்து போயிட்டாங்க, பார்க்கவே பாவமாயிருக்குது. எனக்கு மட்டும் நோயைக் குணப்படுத்தும் திறமை இருந்தால் இந்த உலகத்துல வியாதியே இல்லாம பண்ணிடு



தீருமா?

✦ என்.கோதண்டராமன் ✦



வேன் சாமி'' என்றான்.

''கவலைப்படாதே வைத்தி! உனக்கு நான் அந்தச் சக்தியைத் தருகிறேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் காட்டுக்கே சென்று விட்டார் முனிவர்.

மூன்று மாதங்கள் முடிந்தன. மருது, பாஸ்கரன், வைத்தியநாதன் மூவரும் எப்படி உள்ளனர் என தெரிந்து கொள்ள ஆவலோடு வந்தார் முனிவர்.

மருதுதான் முதலில் கண்ணில் தென்பட்டான். அதே கோயில் வாயிற்படியில் பிச்சைக்காரனாக. ''என்ன மருது, நான் போன பிறகு பையைப் பார்க்கவில்லையா?'' என்றார் முனிவர்.

''அதை ஏன் சாமி கேட்கறீங்க? நீங்க சொன்ன மாதிரியே பையைப் பார்த்தேன். அதனுள்ளே நிறையப் பணம் இருந்தது. எடுக்க எடுக்க குறையவில்லை. என்னால் முடிந்த அளவு ஏழைகளுக்கு இல்லை என்று சொல்லாமல் பணம் கொடுத்தேன். நல்லதற்கு என்று பணம் கொடுத்தால் ஓசியில்

தானே வருகின்றது என பலர் தீய வழியில் செலவிட்டனர். கடனாக பலருக்குக் கொடுத்தேன். கொடுத்ததைக் கேட்டபோது விரோதம் வந்தது. கொலை செய்யவே வந்தார்கள். என்னால் துன்பத்தைப் பொறுக்க முடியவில்லை சாமி. நேற்று தான் கோயில் குளத்திலே பையைப் போட்டு விட்டு பழையபடி நிம்மதியாக பிச்சை எடுக்க வந்து விட்டேன். எனக்கு இந்த வாழ்க்கையே போதும் சாமி!'' என்று கூறி அழுதான்.

''கவலைப்படாதே மருது. இதுதான் உலகம். இப்பவாவது புரிந்து கொள். இந்தப் பொற்காசுகளை வைத்து ஏதாவது தொழில் செய்து, ஏழைகளுக்கு உதவி, நல்லவனாக வாழ்''எனக் கூறி கூறிவிட்டு நடந்தார் முனிவர்.

இரண்டு தெருக்கள் கடந்து ஓரிடத்தில் பாஸ்கரனைப் பார்த்தார் முனிவர். ''பாஸ்கரா எப்படிப்பா இருக்கற? எங்கே அட்சய பாத்திரம்?'' என்றார்.

''அதை ஏன் சாமி கேட்கறீங்க? நான் நல்லதை நினைச்சு உங்க உதவியைக் கேட்டேன். இந்த ஊர் ஏழைகள் எல்லாருக்கும் அறுசுவை உணவு படைத்தேன். நாளாக நாளாக இந்த ஊர்ல எல்லாரும் உழைப்பதை விட்டுட்டாங்க. உணவு கொடுத்து கொடுத்து கை வலிச்சு போச்சு. அதோடு மளிகை கடைகளில் வியாபாரமே ஆகவில்லையாம். அரிசிக் கடையில அரிசி வாங்க ஆளில்லையாம். வியாபாரிகள் எல்லாம் என்னை அடிக்க வந்துட்டாங்க. என்னோட அட்சய பாத்திரத்தைப் பறித்து கோயில் குளத்தில் போட்டுட்டாங்க. இந்த உலகத்தைப் புரிந்து கொண்டேன் சாமி'' என்றான். சிரித்தபடியே நடக்க ஆரம்பித்தார் முனிவர்.

எதிரிலே வேகமாக ஓடி வந்தான் வைத்தியநாதன். ''வைத்தி நில்'' என்று தடுத்தார் முனிவர்.

''நீங்கதான் என்னைக் காப்பாத்தணும் சாமி'' என்று காலில் விழுந்தான் வைத்தியநாதன்.

''வைத்தி என்ன நடந்தது. பயப்படாமல் சொல்'' என்றார் முனிவர்.

''சாமி, இந்த ஊர் ஜனங்க நல்லா இருக்கணும்னு உங்களிடம் உதவி கேட்டு எல்லாருடைய வியாதியையும் போக்கினேன். வெளியூர் ஜனமெல்லாம் வண்டிகட்டிக் கொண்டு வந்து உடம்பைக் குணப்படுத்திக் கொண்டு போனாங்க. நான் காசு கூட வாங்கல. நான் எந்த இலை கொடுத்தாலும் பச்சிலை மூலிகையா அவங்க உடல் நோயைக் குணப்படுத்துச்சு. ஆனால் மருந்து கடைக்காரர்களும் மருத்துவர்களும் தங்களுடைய வியாபாரம் கெட்டுப் போச்சு, வருமானம் போயிடுச்சின்னு அடிக்க வந்துட்டாங்க.


''பூமியில வியாதியஸ்தர் எல்லாம் குணமானதாலே இறப்பு குறைந்து பூமி பாரம் தாங்க முடியவில்லை என்று பூமாதேவி என் எதிரில் தோன்றி அழுதாள். எல்லாவற்றுக்கும் மேலாக எமதர்மன் சித்திரகுப்தனோடு எருமை மீது ஏறி என் வீட்டிற்கே வந்து விட்டான் சாமி. நீங்கள் தான் காப்பாத்தணும்'' என்றான் வைத்தி.

''வைத்தியநாதா, இந்த உலகம் அதனதன் போக்கில் எது ஒன்றும் முறைப்படி நடந்தால்தான் இயங்கும்''என்று கூறி சிரித்தபடியே காடு நோக்கிச் சென்றார் முனிவர்.

ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜுரிச் நகரிலுள்ள 'பிளைண்ட் ஏக்' என்ற ஹோட்டல் முழுவதும் இருட்டிலேயே இயங்குகிறது. 'ப' வடிவில் இருக்கும் இந்த ஹோட்டல் முழுக்க இருட்டுதான். இருட்டுக்குள்ளேயே சென்று, இடத்தைத் தேடிப் பிடித்து, இருட்டுக்குள்ளேயே சாப்பிட வேண்டும்!

-எஸ்.ராஜம்





புதிர் உலகம்

தோப்பில் இருந்த மரங்கள் எத்தனை?

I நான் ஆட்டோவில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். திடீரென ஆட்டோக்காரர் இரண்டு தினங்கள் வரவில்லை. மூன்றாம் நாள் கூப்பிட்டுக் கேட்டால், 'பணம் கட்டு படியாகவில்லை. இன்னொரு பங்கு பணம் கொடுங்கள். அப்பொழுது தான் வர இயலும்' என கண்டிப்பாகக் கூறிவிட்டார். சரி என்று ஒப்புக் கொண்டு, தொடர்ந்து பள்ளி சென்றேன்.

ஆட்டோவில் பள்ளிக்குச் செல்லும் போது கமலாவும் உடன்வர ஏற்பாடு செய்தேன். நான் 2 பங்கு பணம் தருவதாகவும் கமலா 1 பங்கு பணம் தருவதாகவும் ஒப்புக் கொண்டோம். ஆட்டோவில் மூவர் செல்லலாம் என்பதை மனதில் கொண்டு விமலாவும் உடன்வர ஏற்பாடு செய்தேன். இருவரும் ஆளுக்குப் பாதி என ஒப்பந்தம் செய்து, ஆட்டோவில் செல்கிறோம். இப்பொழுது மூவரும் கொடுக்கும் தொகை சமமாக உள்ளது என்றால், ஆட்டோ கட்டணம் எவ்வளவு என உடனே கூறுங்கள் பார்க்கலாம்!

- சிவ. மணவழகி, ஆதனூர்

II கந்தன் ஒரு தோப்புக்குச் சொந்தக்காரன். அங்கு மா, கொய்யா, சப்போட்டா மரங்கள் இருந்தன. தோப்பில் மூன்றில் ஒரு பகுதி மா மரங்கள், நாலில் ஒரு பகுதி கொய்யா மரங்கள், சப்போட்டா மரங்களோ முப்பது இருந்தன. அப்படியானால் கந்தனின் தோப்பிலிருந்த மொத்த மரங்கள் எத்தனை?


- வெ. ராணி,
நாமகிரிப்பேட்டை

III கி.மு.10ம் ஆண்டிற்கும் கி.பி.10ம் ஆண்டிற்கும் இடையில் எத்தனை ஆண்டுகள் உள்ளன?

IV என்னிடம் நமது நாட்டில் புழக்கத்திலுள்ள ஒன்பது வித மதிப்பிலான ரூபாய் நோட்டுகள் உள்ளன. அப்படியானால் என்னிடம் மொத்தம் எவ்வளவு ரூபாய் இருக்கும்?


- நெ. இராமன்,
சென்னை

V புயல் நிவாரண நிதிக்காக நிதி வசூலிக்கப்பட்டது. ஒருவர் ஒரு தொகையை உண்டியலில் போட்டார். இரண்டாவது நபர் முதல் நபரை விட இரு மடங்குத் தொகையைப் போட்டார்.



மூன்றாவது நபர் இரண்டாவது நபரை விட மூன்று மடங்குத் தொகையை உண்டியலில் போட்டார். நான்காம் நபர் மூன்றாம் நபரை விட நான்கு மடங்குத் தொகையை உண்டியலில் போட்டார். நான்கு பேரும் போட்ட மொத்தத் தொகை ரூ. 8250. அவ்வாறெனில் ஒவ்வொரு நபரும் உண்டியலில் போட்ட தொகை எவ்வளவு?

-ஆர். அஜிதா,
கம்பம்



VI இக்கட்டங்களில் கொடுக்கப் பட்டுள்ள 1 முதல் 25 எண்களை, எந்த வடிவில் மாற்றியமைத்து கூட்டினால் 65

1	2	3	4	5
6	7	8	9	10
11	12	13	14	15
16	17	18	19	20
21	22	23	24	25

வரும்? எங்கே போடுங்கள் பார்க்கலாம்!

- சீ.வைதேகி ஒன்பதாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப்பள்ளி,
மயிலாடுதுறை

VII கீழே கேட்கப்பட்டிருக்கும் கேள்வி களுக்கு விடைகள் அகர வரிசையில் அமைந்திருக்கும். எங்கே விடைகளை எளி தாகக் காணுங்கள் பார்க்கலாம்.

1. 'காளை' என்பதை இப்படியும் சொல்லலாம்.
2. புகழ்பெற்ற மயிலாசனத்தை இந்தியா விலிருந்து எடுத்துச் சென்றவர் யார்?
3. நாணயங்கள் செய்யப் பயன்படும் உலோகம் எது?
4. கிழக்கு, மேற்கு மலைகள் சந்திக்கும் இடம் ____
5. காச நோய் எந்த உறுப்பைப் பாதிக்கும்?
6. 'உலகின் ஒளி' என்ற சிறப்புப் பெயர் கொண்ட பெண்ணரசி யார்?
7. பகலில் பெண் பறவையும், இரவில் ஆண் பறவையும் அடைகாக்கும் பறவையினம் எது?

- த. மணிக்கலா,
திருவாரூர்

விடைகள்:

I ஆட்டோ கட்டணம் 300 ரூபாய்
அதில் என் பங்கு 200 ரூபாய்
கமலா பங்கு 100 ரூபாய்
என் பங்கில் பாதி விமலா 100
ஆக ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய்

II 3ல் ஒரு பாகத்தையும், நான்கில் ஒரு பாகத்தையும் சேர்த்தால் 7/12 வருகிறது. மீதி 5/12, பன்னிரண்டில் ஐந்து பாகம் சப்போட்டா. அது 30 மரங்கள். ஆகவே தோப்பில் உள்ளது 12/5 x 30=72 மரங்கள்


III 20 ஆண்டுகள் என்று கூறினால் தவறு. 19 ஆண்டுகள்தான் சரியான விடை. ஏனெனில் கி.பி. 0 என்ற ஆண்டோ கி.மு. 0 ஆண்டோ இல்லை.

IV ரூ.1688. (1000+500+100+50+20+10+5+2+1 = ரூ. 1688)

V

முதலாமவர் போட்டது	ரூ. 250
இரண்டாமவர் போட்டது	ரூ. 500
மூன்றாமவர் போட்டது	ரூ. 1500
நான்காமவர் போட்டது	ரூ. 6000
மொத்தம்	ரூ. 8250

VI



VII
1. ந - நந்தி 2. நா - நாதிர்ஷா
3. நி - நிக்கல் 4. நீ - நீலகிரி
5. நு - நுரையீரல் 6. நூ - நூர்ஜஹான்
7. நெ - நெருப்புக்கோழி



நெட் பிட்ஸ்

பல் துலக்கும் நாய்!

லண்டன் நகரத்தில் ஒரு பெண்மணி, பஸ்ஸில் பயணம் செய்துகொண்டு இருந்தார். இறங்குமிடம் வந்தவுடன், தன் கையிலிருந்த பார்சலை, சீட்டிலேயே வைத்துவிட்டு, எழுந்தார். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர், ''மேடம்! பார்சலை விட்டு விட்டீர்களே!'' என்று கேட்க, அந்தப் பெண்மணி சொன்ன பதில்: ''வேணும்னுதான் எடுத்துக் கொள்ளவில்லை. பஸ்ஸில் தவறி விடப்படும் பொருட்களை, 'காணாமல் போன பொருட்கள்' பிரிவில் சேர்த்து விடுவார்கள். அங்கேதான் என் கணவர் வேலை பார்க்கிறார். இந்த பார்சல் என் கணவருக்கான மதிய உணவு. தினமும், இப்படித்தான் நான் அவருக்குச் சாப்பாடு அனுப்புவது வழக்கம்!''

ஓர் அமெரிக்க டூரிஸ்ட், டெல்லிக்கு வந்தார். ஒரு டூரிஸ்ட் கைடை அழைத்துக் கொண்டு ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். ராஷ்டிரபதி பவனைக் காட்டி, ''இதுதான் எங்கள் ஜனாதிபதி வசிப்பிடம். இதைக் கட்டி முடிக்க எட்டு வருடங்களாயின'' என்று கைடு சொன்னார். ''அவ்வளவு வருடங்களா? அமெரிக்காவாக இருந்தால், இரண்டே வருடங்களில் கட்டி முடித்திருப்பார்கள்'' என்றார் டூரிஸ்ட்.


அடுத்து பாராளுமன்றக் கட்டடம், கட்டி முடிக்க நான்கு வருடமானதாக கைடு சொல்ல, ''அமெரிக்காவில் நாலே மாதங்களில் கட்டி விடுவோம்'' என்றார் டூரிஸ்ட்.

எந்தக் கட்டடத்தைக் காட்டினாலும், எங்கள் நாட்டில் அதைவிடச் சீக்கிரமாக கட்டி விடுவோம் என்று சொல்லி வெறுப்பேற்றிக் கொண்டே வந்தார்.

மறுநாள் ஆக்ரா போனார்கள். தாஜ் மஹாலைச் கட்டிக்காட்டி, ''இது என்ன கட்டடம்?'' என்று கேட்டார் டூரிஸ்ட்.

கைடு இதுதான் சமயம் என்று பதிலடி கொடுத்துவிட்டார். கைடு சொன்ன பதில்: ''இரண்டு நாளுக்கு முன்னால் நான் இங்கே வந்தபோது, ஒரு கட்டடமும் இல்லையே! ஏதோ புதுக் கட்டடம் போல இருக்கு!''

ஒரு போலீஸ்காரர், ஜெயிலிலிருந்து, ஒரு கைதியை கோர்ட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிற வழியில் பலமாகக் காற்று அடிக்க, போலீஸ்காரரின் தொப்பி பறந்து போய் தூரத்தில் விழுந்தது.



* மோனாலிசா



* போர்க்கி

உடனே கைதி கேட்டார்: ''ஐயா! நான் வேண்டுமானால் போய் எடுத்துக் கொண்டு வந்து தரட்டுமா உங்களுடைய தொப்பியை?''

அதற்கு போலீஸ்காரர் சொன்னார்: ''என்னை என்ன முட்டாள் என்று நினைத்துக் கொண்டு விட்டாயா? உன்னைப் போய் எடுத்துக் கொண்டு வர அனுமதித்தால், என்னை ஏமாற்றி விட்டு, அப்படியே ஓடிப்போய் விடுவாய் என்று எனக்குத் தெரியாதா? நீ இங்கேயே இரு. நான் போய் எடுத்துக் கொண்டு வருகிறேன்!''

சமீபத்தில் இன்டர்நெட்டில் படித்த இரண்டு செய்திகள் சுவாரசியமானவை.

புகழ் பெற்ற ஓவியர் லியனார்டோ டாவின்ஸி வரைந்த உலகப் புகழ் பெற்ற ஓவியமான புன்னகை அரசி 'மோனாலிசா' பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது

பாரிசில் ஒரு மியூஸியத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஓவியத்துக்கு ஐந்நூறு வயதாகிறது. எனவே, மோனாலிஸாவுக்கும் முதுமை ஏற்பட்டுவிட்டது போல, ஓவியம் பொலிவு இழந்து கொண்டு இருக்கிறது.

அந்த ஓவியத்தை மறுபடி உயிரூட்டி புதுப்பித்து, பாதுகாக்க முடியுமா? என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள், பாரிஸின் லோரோ மியூஸிய நிர்வாகத்தினர். உடனடியாக, பார்வையாளர்கள் பகுதியிலிருந்து அந்த ஓவியத்தை விலக்கி, பிரத்யேகமாக ஓர் அறையில் வைத்து பாதுகாப்பது குறித்து மியூஸிய நிர்வாகிகள் ஆலோசனை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்த செய்தி தமாஷானது. கான் ஏகன் என்ற பெண்மணியின் நாய் யோர்க்கி.



நாய்க்குட்டி யோர்க்கிக்கு, பல்வலி வந்து, ஒரு பிராணிகள் டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனார் கான். டாக்டர் சிகிச்சைக்குப் பின்னர், தினமும் யோர்க்கிக்குப் பல் தேய்த்து விடுங்கள் என்று ஆலோசனை சொன்னார். அதன்படி, தினமும் நாய்க் குட்டிக்குப் பல் தேய்த்து விட ஆரம்பித்தார் கான். ஒருநாள் சட்டென்று பிரஷ்ஷை காலால் எடுத்து, தானே பல் தேய்த்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டது யோர்க்கி. அப்புறம் என்ன? இப்போதெல்லாம் தானே பல் தேய்த்துக் கொள்கிறது நாய்க்குட்டி யோர்க்கி!

தேர்தல் திருவிழா முடிந்து, நாட்டில் புது அரசாங்கம் அமைந்துள்ள நேரத்தில் இந்தியத் தேர்தல்கள் குறித்து சில சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாமா?


● இந்தத் தடவை தேர்தலில் எல்லா தொகுதிகளிலுமே மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதல்லவா? இதற்கு முன்பு வாக்குப் பெட்டிகள்தாம் பயன்படுத்தப்பட்டன. 1952ல் நடந்த முதல் பொதுத்தேர்தலில் கோத்ரெஜ் நிறுவனம், வாக்குப் பெட்டிகளை சப்ளை செய்தபோது, ஒரு வாக்குப்பெட்டியின் விலை என்ன தெரியுமா? வெறும் ஐந்து ரூபாய்!

● இன்றைய இந்திய அரசியலில் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது சாதாரணமான விஷயமாகி விட்டது. 77ல், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, நடந்த தேர்தலில்தான் எதிர்க் கட்சிகள் அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, காங்கிரஸ் கட்சியைப் படுதோல்வி அடையச் செய்தன. தேர்தல் சமயத்தில் இந்திரா காந்தி, "எதிர்க்கட்சிகளின் கூட்டணியை 'கிச்சடிக் கூட்டணி' என்று விமர்சனம் செய்தார். தேர்தலில் ஜெயித்த எதிர்க்கட்சிகள், தங்கள் வெற்றியைக் கொண்டாட, பல இடங்களில் கிச்சடி விநியோகம் செய்தார்கள்.

● 1988 ல் மேகாலயாவில் நடந்த தேர்தலில் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்கள் சம எண்ணிக்கையில் வாக்குகள் பெற்றிருந்தனர். தேர்தல் அதிகாரி யார் வெற்றி பெற்றவர் என்று முடிவு செய்ய என்ன செய்தார் தெரியுமா? கிரிக்கெட் மேட்ச் போல 'டாஸ்' போட்டார். அதில் வென்றவர் தேர்தலில் வென்றவராக அறிவிக்கப்பட்டார்.

● உ.பி.யில் முக்கிய கட்சியாக இருக்கும் பகுஜன் சமாஜ் கட்சிக்கும், அமெரிக்க அதிபர் புஷ் சார்ந்துள்ள குடியரசுக் கட்சிக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இரண்டு கட்சிகளின் சின்னமும் என்ன தெரியுமா? யானை!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌளி**



எங்கள் எண்ணங்கள்...

சிறு துளி, பெரு வெள்ளம்!

காலையில் பல் தேய்க்கும்போதும், ஷேவ் செய்யும்போதும் கூட வாஷ்பேசினில் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்க வேண்டாமே! குழாயை தேவையானபோது மட்டும் திறந்தால் போதுமே! அல்லது ஒரு கப்பில் தண்ணீர் பிடித்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற பூவாளிகள் பயன்படுத்தலாம். ரப்பர் பைப்புகள் மூலம் அதிகப்படியாக தண்ணீர் விடத் தேவையில்லை. பைக், கார் போன்றவற்றை ஈரத் துணியால் துடைத்தால் போதும். நிறையத் தண்ணீர் விட்டு கழுவ வேண்டாம்!

வீட்டை ஈரத்துணியால் துடைத்தால் போதும். துணிகளை அலசிய நீர், காய்கறிகளை அலம்பிய நீர் போன்றவற்றை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றலாம். குழந்தைகள் குழாயைத் திறந்துவிட்டு விளையாடுவதைத் தடுக்க வேண்டும். குளிக்கும்போது ஒரு வாளியில் பிடித்துக் கொண்டு குளிக்க வேண்டும்.

- ஆர். சாரதா,
சென்னை



கிணறு வைத்திருப்பவர்கள் கண்ட கண்ட நேரங்களில் சும்மா இருக்கிறோமே என்று கருதி அதை இறைத்து வீணடிக்கக் கூடாது. வீட்டிற்கு அருகில் குழிகளைத் தோண்டியும், கரைகளை உயர்த்தியும் மழை நீரைச் சேமித்து அதன் மூலம் நிலத்தடி நீர்வளம் பெருகச் செய்வதால் நம் வீட்டுக் கிணறுகளில் வற்றாமல் நீர் கிடைக்க வழி செய்யலாம். அதனால் அருகாமையிலுள்ள மரம், செடி கொடிகள் செழிக்கும். கழிவுநீரை வீணாக்காமல் நம் வீட்டில் வளர்க்கும் செடிகளுக்குப் பயன்படுத்தலாம். சிறிது தூரத்தில் மழைநீர் வீணாகிப் பெருகி ஓடுவதைத் தடுத்து நம் வீட்டுத் தோட்டங்களுக்குப் பாய்ச்சலாம். அதை நாம் அமைக்கும் மழை நீர் குழிகளில் சேமிக்கலாம். பொதுவாக உபயோகமான முறையில் தண்ணீரை சிக்கனமாகவும் அதேநேரம் தேவையான அளவிலும் பயன்படுத்துவது தண்ணீரைச் சேமிப்பதற்குச் சமம்.

- வீ. கலாதேவி,
இடைப்பாடி



மொட்டை மாடியில் விழும் மழை நீரை குழாய்கள் மூலம் தரைப் பகுதிக்குக் கொண்டு வந்து கிணற்றுக்கும் வீட்டுச் சுவருக்கும் இடையில் உள்ள தொட்டியில் சேகரிக்க வேண்டும். அங்கு வடிகட்டிய பின்னர் திறந்த வெளி கிணற்றுக்குள் மழைநீரை விழச் செய்து சேமிக்கலாம். திறந்தவெளி கிணறுகள் இல்லாத வீடுகளில் மொட்டை மாடியில் இருந்து கொண்டு வரப்படும் மழை நீரை சிறு கால்வாய் மூலம் வடிகட்டும் தொட்டிக்குள் பாய்ச்ச வேண்டும். அங்கிருந்து கசிவு நீர்க்குழாய் மூலம் கிணற்றுக்குள் மழை நீரைச் செலுத்திச் சேமிக்கலாம்.

- சே. நம்பிகிருஷ்ணன்,
பத்தாம் வகுப்பு, டி.வி.எஸ்.
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருக்குறுங்குடி

தண்ணீர்ப் பிரச்னை என்பது இப்போது நம் தமிழ்நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்னை. ஒட்டுமொத்த தண்ணீர் பிரச்னையையும் நம் ஒவ்வொருத்தரால் தீர்க்க முடியாது; எனினும் அவரவர் வீட்டில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் தண்ணீரைச் சேமிக்கவாவது முடியும். சிறு சிறு துளி, பெரு வெள்ளம் என்று நம் முன்னோர்கள் சொன்னது எவ்வளவு உண்மை!

- ஸ்வீட்டி ரஞ்சனி,
சென்னை

ஓவியம் தீர்த்தம்



முதல் பரிசு
ஜி. மணிகண்டன்,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
உப்பிலியபுரம், திருச்சி மாவட்டம்




இரண்டாம் பரிசு
பி. கார்த்திகா,
கொளத்தூர்,
சென்னை

தர்பூசணி!

வண்ணத் தூரிகை முடிவு



மூன்றாம் பரிசு
கே. முகமது அலி ஜின்னா,
பன்னிரண்டாம் வகுப்பு,
இராமநாதபுரம்,
கோவை மாவட்டம்



ஆறுதல் பரிசு
எஸ். ராஜலக்ஷ்மி
திருக்கோயிலூர்,
விழுப்புரம் மாவட்டம்



ஆறுதல் பரிசு
என். ராஜேந்திரன்,
எட்டாம் வகுப்பு,
அறந்தாங்கி

மே இதழில் 'தர்பூசணி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். வந்து குவிந்த தர்பூசணிகளில் பரிசு பெற்றவை இங்கே இடம் பெற்றுள்ளன.



கலெக்டர்



காலையில் கண் விழித்ததுமே பரத்துக்குச் சலிப்பாக இருந்தது. 'இன்றைக்கும் தாத்தாவுக்கு நியூஸ் பேப்பரைப் படிச்சுக் காட்டணுமே. எப்பத்தான் இது முடியுமோ?' என்று சலித்துக் கொண்டான்.

பரத்தின் தாத்தா பணியிலிருந்து ஒய்வு பெற்றவர். தினசரிகள், கதைப் புத்தகங்கள் படிப்பதுதான் அவரது பொழுதுபோக்கு. பரத்தையும் தினமும் செய்தித்தாளைப் படி என்று வற்புறுத்துவார்.

''எல்லாவற்றையும் படிக்கணும்னு அவசியமில்லே. முக்கியமான நாட்டு நடப்பை மட்டுமாவது படி'' என்பார் தாத்தா.

''இந்த வயசிலேயே நாட்டு நடப்பைத் தெரிஞ்சுக்கிட்டு, நான் என்ன தாத்தா செய்யப் போறேன்?'' என்று பரத் கேட்டான்.

''இன்னிக்கு நீ சின்னப் பையனா இருக்கலாம். ஆனா நாளைக்குப் பெரியவனாகும்போது நாட்டு விஷயங்களைத் தெரிஞ்சுக்க வேணாமா? இப்ப இருந்தே படிக்கிற பழக்கத்தை ஏற்படுத்திக்கணும். நாளைக்கு அது உனக்கு உதவியாகவும் இருக்கும்'' என்பார்.

''அப்படியே நாட்டு நடப்பைத் தெரிஞ்சுக்க நினைச்சா, டீ.வியில நியூஸ் பார்க்கறேன்'' என்பான்.

''காட்சியா பார்க்கறது வேற. படிச்சுத் தெரிஞ்சுக்கறது வேற. பார்க்கறதைவிட படிச்சுத் தெரிஞ்சுக்கற விஷயம் நம்ம மூளையில நல்லா பதியும். சீக்கிரத்துல மறையவும் மறையாது. அதனாலதான் படிக்கச் சொல்றேன்'' என்பார்.

''போங்க தாத்தா, எனக்கு ஆர்வமே இல்லை'' என்று கூறி விடுவான் பரத்.

ஆனால் கொஞ்ச நாட்களாக செய்தித்தாளைப் படிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. காரணம் அவனது தாத்தாவிற்குக் கண்ணில் அறுவை சிகிச்சை நடந்துள்ளது. இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு அதிக வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாது. புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று டாக்டர் கூறி விட்டார்.

அப்பா பரத்தை அழைத்தார். ''பரத், தாத்தாவுக்குக் கண் பழைய படி ஆகறவரைக்கும் நீதான் தினமும் காலையில நியூஸ் பேப்பரைப் படிச்சுக் காட்டணும்'' என்று சொல்லி விட்டார்.

பரத்துக்கு அது சலிப்பான விஷயமாக இருந்தாலும், தாத்தாவுக்காக தினமும் படித்துக் காட்டினான். அப்படித்தான் இன்றும் படித்துக் காட்டிவிட்டு, குளித்து தயாராகி பள்ளிக்குப் புறப்பட்டான்.

வகுப்பில் பாடம் நடந்து

தந்த பரிசு!

✣ வாண்டுதாசன் ✣



கொண்டிருந்தபோது, திடீரென பரபரப்பு ஏற்பட்டது. தலைமை ஆசிரியருடன் ஒருவர் உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியரும் பணிவுடன் வணங்கினார்.

மாணவர்கள் எழுந்து நிற்க, வந்தவர் அமரச் சொன்னதும் அமர்ந்தார்கள்.

பரத் அவரையே சில நொடிகள் பார்த்தான். 'இவரை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே' என்று யோசித்தவனுக்குச் சட்டென நினைவுக்கு வந்துவிட்டது.

"மாணவர்களே, என்னை யாருன்னு தெரியுதா?" என்று அவர் கேட்டார்.

பரத் சட்டென எழுந்தான். "தெரியும் சார். இந்த மாவட்டத்தின் கலெக்டர் ரத்தினவேல்" என்றான்.

"எப்படி தெரியும்?" என்று கேட்டார் கலெக்டர்.

"உங்க போட்டோவை செய்தித்தாளில் பார்த்திருக்கிறேன்" என்றான் பரத்.

"பரவாயில்லையே. செய்தித்தாளெல்லாம் படிப்பியா?" என்று கேட்டார்.

"பிரிலியண்ட் ஸ்டூடண்ட் சார்" என்றார் வகுப்பாசிரியர்.

"அப்படியா? பாடத்துல சரி. மற்ற விஷயங்களில் எப்படின்னு பார்க்கறேன். இந்த வருஷம் குடியரசு தினத்தின்போது ராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான அசோக் சக்ரா விருது யார் யாருக்கு வழங்கப்பட்டது?" என்று கேட்டார்.


பரத் சில நொடிகள்தான் யோசித்தான். உடனே நினைவுக்கு வந்தது. "திரிவேணி சிங், சன்ஜோக் ஷேத்ரி" என்றான்.

"வெரிகுட்" என்ற கலெக்டர் மேலும் சில கேள்விகளைக் கேட்க, அதற்கும் சரியான விடைகளைச் சொன்னான்.

"சபாஷ் பரத். வெறும் ஏட்டுச் சுரைக்காயா மட்டும் இல்லாம, நாட்டு விஷயங்களையும் தெரிஞ்சு வெச்சிருக்கே. நம் நாடு எப்படி எல்லாம் இருக்குன்னு தெரிஞ்சுக்கறது எல்லோருடைய கடமை. மற்ற மாணவர்களும் பரத்தைப் போலவே இருக்கணும். உனக்கு என்னோட பாராட்டுகள். உன் பொது அறிவுக்குப் பரிசா இதை வெச்சுக்க" என்ற கலெக்டர் தனது கையில் இருந்த ஒரு புத்தகத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

கலெக்டர் சொன்னதும் தலைமையாசிரியர் அழைத்துப் பாராட்டினார். "நம்ம ஸ்கூலுக்கு நல்ல பேரை வாங்கித் தந்துட்டே, வெரிகுட்" என்றார்.

பரத்திற்குச் சந்தோஷமாக இருந்தது. 'இந்தப் பெருமைக்கு எல்லாம் காரணம் தாத்தாதான். வீட்டிற்குப் போனதுமே அவருக்கு நன்றி சொல்லணும். அதோடு இனிமேல், தாத்தாவுக்காக மட்டுமில்லாமல் தனக்காகவும் தினமும் செய்திதாளைப் படிக்கணும்' என்று முடிவு செய்தான்.



விளையாட்டு உலகம்

சாதித்த ஜூனியர் ஹாக்கி அணி!

மேற்கிந்தியத் தீவுகளில் இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கும் இடையே டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. செயின்ட் ஜான்ஸில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியில் 400 ரன்களைக் குவித்து உலக சாதனை படைத்தார் பிரையன் லாரா.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இதே இடத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ரன்களைக் குவித்தார் லாரா. 'அதிக ரன்களைக் குவித்தவர்' என்ற உலக சாதனையைக் கடந்த ஆறு மாதத்துக்கு முன்புவரை தக்க வைத்துக் கொண்டிருந்தார் லாரா. ஆஸ்திரேலியாவின் மாத்யூ ஹேடன் 380 ரன்களைக் குவித்து லாராவின் சாதனையை முறியடித்தார். தனது பத்தாண்டு கால சாதனையை முறியடித்த மாத்யூ ஹேடனின் சாதனையை லாரா இப்போது முறியடித்திருக்கிறார். "சாதனையை என்னால் நம்ப முடியவில்லை. இந்த நிகழ்வு எனக்குப் புத்துணர்வை அளித்துள்ளது. உண்மையிலேயே மிகவும் களைப்பாக இருக்கிறேன். ஆனால் அது மிகப் பெரிய விஷயம்" என்று லாரா 400 ரன்கள் அடித்த மகிழ்ச்சியில் கூறினார். இந்தச் சாதனை நாயகனின் வண்ண போஸ்டர் 40, 41 ஆம் பக்கங்களில் உங்களுக்காக...



* சாதித்த ஹாக்கி அணி



* லாரா

பாகிஸ்தானுக்குச் சென்ற இந்திய விளையாட்டு அணிகள் வெற்றியுடன் திரும்பி வந்துள்ளன. இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளை வென்று சரித்திர சாதனைகளைப் படைத்தது. அதே போல் இந்திய ஜூனியர் ஹாக்கி அணி ஐந்தாவது ஜூனியர் ஆசிய ஹாக்கி போட்டியில் பங்கேற்க பாகிஸ்தான் சென்றது.

இறுதிப் போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதின. விறுவிறுப்பான போட்டியின் இறுதியில் 5-2 என்ற கோல் கணக்கில் இந்தியா, பாகிஸ்தானை வென்றது. இந்த வெற்றியின் மூலம் ஆசியக் கோப்பையை வெல்ல வேண்டும் என்ற இந்தியாவின் நீண்டநாள் கனவு நிறைவேறியது. பாகிஸ்தானுக்கு எதிராக அந்நாட்டில் 5 ஆண்டுகளில் இந்தியா பெறும் முதல் வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் வோட்டு யாருக்கு?



நாடு முழுவதும் தேர்தல் அலை அடித்து ஓய்ந்திருக்கிறது. 18 வயதானவர்கள் மட்டுமே இந்தியாவில் வோட்டுப் போட முடியும். 18 வயதுக்கும் குறைவானவர்களுக்கும் வோட்டுப் போடவும், விரலில் மை வைத்துக் கொள்ளவும் ஆசை இருக்கும். அப்படிப்பட்டவர்களின் ஆசையை நிறைவேற்ற, சென்னையில் உள்ள கிஷ்கிந்தா தீம் பார்க் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

வோட்டுப் போடுவது ஒவ்வொருவரின் ஜனநாயகக் கடமை என்பதை சிறு வயதிலேயே அவர்கள் மனதில் உருவாக்கி விட 'சிறுவர் வாக்குச் சாவடி' கிஷ்கிந்தாவில் அமைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 24ந் தேதி முதல் ஜூன் 6ந் தேதி வரை கிஷ்கிந்தாவுக்கு வரும் குழந்தைகள் இந்த வாக்குச் சாவடியில் வோட்டுப் போடலாம். இது முழுக்க முழுக்க சிறுவர்களுக்கான தேர்தல். பெரியவர்களுக்கு வோட்டளிக்க அனுமதி கிடையாது. நிஜத் தேர்தலைப் போல் இந்த வாக்குச் சாவடியில் 'ஆயுதம்' தாங்கிய காவலர்களும் தேர்தல் அதிகாரியும் தேர்தல் பணியில் இருக்கின்றனர்.

வாஜ்பாய், சோனியாகாந்தி, ஜெயலலிதா, கருணாநிதி, ரஜினிகாந்த் வேடமிட்டு சிறுவர், சிறுமியர் இந்தத் தேர்தலில் நிற்கின்றனர். இவர்கள் அனைவரும் கிஷ்கிந்தாவுக்கே தங்கள் மேலான ஆதரவை தெரிவித்து இருக்கிறார்கள்.

கிஷ்கிந்தாவுக்கு வரும் குழந்தைகள் விரலில் அடையாள மை இடப்பட்டு, வோட்டுச் சீட்டில் தங்கள் முத்திரையைப் பதிவு செய்து, வாக்குப் பெட்டியில் போட வேண்டும். இந்தச் சிறுவர் தேர்தல் முடிவுகள் ஜூன் 7ந் தேதி அன்று அறிவிக்கப்பட உள்ளன.








அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி

சென்ற இதழில் 'சிறுகதைப் போட்டி' அறிவித்திருந்தோம், நினைவிருக்கிறதா? விடுமுறையில் யோசிக்கவும், எழுதவும் நிறைய நேரம் கிடைக்கும். உங்கள் கதைகளை விரைவில் எழுதி அனுப்புங்கள். கடைசித் தேதி 31.5.2004



கடிதங்கள்

வரவேற்பறையில் வாத்துகள்!



கலக்கல்!

✉ மே இதழ் விடுமுறை கலாட்டாவாக, கலக்கலாக இருந்தது. நீங்கள் அறிவித்தது போலவே நிறைய கதைகள், ஜோக்ஸ், விளையாட்டு என வழங்கி விட்டீர்கள். பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடி பகுதியைத் தொடர்ந்து வண்ணத்தில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

- ஆர்.கே. சிவராஜ், கோட்டையூர்

மகிழ்ச்சி

✉ ஒவ்வொரு மாதமும் கோகுலம் தவறாமல் எங்களுக்கு அஞ்சல் மூலம் வந்து சேர்கிறது. எங்கள் மகிழ்ச்சிக்கு முக்கியக் காரணம் கோகுலம்தான். படக்கதைகள், சிறுகதைகள், துணுக்குகள், ஓவியங்கள், அனுபவங்கள் எங்களை மிகவும் கொள்ளை கொள்கின்றன. கோகுலம் எங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

- தி.சே. அறிவழகன், சி. மலர்விழி, அ. அபிராமி, அ. அனுசுயா, திருப்புலிவனம்

ஆரம்பமே அசத்தல்!

✉ வழக்கம் போல் சிறுகதைகளும் படங்களும் சூப்பர். புதையல் தீவு தொடர்கதை ஆரம்பமே விறுவிறுப்பாக உள்ளது. அடுத்த இதழை எதிர்நோக்க வைத்துவிட்டது. பறக்கும் வாத்துகள் என் வீட்டின் வரவேற்பறையை அலங்கரிக்கின்றன. கிளியை வெட்ட மனம் இல்லை, ஆல்பத்தில் ஒட்டி விட்டேன். விடுமுறைச் சிறப்பிதழ், விடுமுறையை மேலும் உற்சாகமாக்கிவிட்டது.

- சே. நம்பிகிருஷ்ணன், திருக்குறுங்குடி, திருநெல்வேலி மாவட்டம்

பறக்கும் வாத்துகள்!

✉ கவிதைத் தேனைக் கலந்து தந்த சூரியனைத் தேடும் சேவல் கதை அருமை! பூதம் கொடுத்த வேலை, படக்கதை ஜோர். பறக்கும் வாத்துகளை எங்கள் வரவேற்பறையில் மாட்டியுள்ளேன். வீட்டிற்கு வருகிறவர்கள் பாராட்டுகிறார்கள்.

- ஆர்.ஜி. வள்ளி, திசையன்விளை

ரொம்ப பிஸி!


✉ லீவு விட்டவுடன் வெயிலில் விளையாடக் கிளம்பி விடுவேன். என் அம்மா புலம்பிக் கொண்டிருப்பார். ஆனால் ஒரு வாரமாக நான் அடிக்கடி வெளியில் செல்லாமல் வீட்டிலிருப்பதைப் பார்த்து என் அம்மா ஆச்சரியப்பட்டார். அதற்குக் காரணம் கோகுலம்தான். கோகுலத்தைப் படிப்பது, யார் சிறந்த நண்பன்? - விளையாடுவது, வாத்துகளைச் செய்து மாட்டுவது என பிஸியாகிவிட்டேன்.

- எல். அருண், கிழக்குத் தாம்பரம், சென்னை

செஞ்சி ஸ்பெஷல்

✉ விழுப்புரம் ஸ்பெஷல் என்பதைவிட செஞ்சி ஸ்பெஷலாக வந்திருக்கிறது மே இதழ். அட்டையில் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதத்தில் போஸ் கொடுத்திருந்தது ரசிக்கும் படி இருந்தது. கோடைச் சிரிப்பு வெயிலுக்கு இதமாக இருந்தது.

- எஸ். ரேணுகாதேவி, வேலூர்



விவாத மேடை

சகலகலா வல்லவர்கள்!



நான்கு நாட்களாக விவேக், ப்ரியா வீட்டுக்கு வரவேயில்லை. ப்ரியா அவனைத் தேடி அவன் வீட்டுக்குச் சென்றாள்.

விவேக்கும் அவன் அம்மாவும் ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ப்ரியாவைப் பார்த்ததும் விவேக் அம்மா ''நீயே இந்த விஷயத்தைக் கேளு ப்ரியா. ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் கராத்தே, பாட்டு, டான்ஸ், ஹிந்தி வகுப்பு, கம்ப்யூட்டர் கிளாஸ்ன்னு சேர்த்து விடறோம். ஆனால் இவன் ஒரு வகுப்புக்கும் ஒழுங்கா போறதில்லை. பணமும் வீண். எத்தனை குழந்தைகள் எவ்வளவு விஷயங்கள் கத்துக்கிட்டு சாதனை படைக்கிறாங்க! இவனைப் பார். எனக்குக் கோபம் வருமா, வராதா? சொல்'' என்றார்.

''அம்மா, உங்களுக்கு ஆசை இருக்கிறதாலே நான் எல்லாத்தையும் கத்துக்க முடியுமா? என்னால என்ன முடியுமோ அதை மட்டும்தான் கத்துக்க முடியும்'' என்று பதிலுக்குக் கோபப்பட்டான் விவேக்.

''ஆன்ட்டி, விவேக் சொல்றதிலும் நியாயம் இருக்கு. அவனுக்கு எதுல ஆர்வம் இருக்கோ, அதை மட்டும் நல்லா கத்துக்கிட்டால் போதுமே!'' என்றாள் ப்ரியா.

''என்னம்மா நீ இப்படி அவனுக்கு சப்போர்ட் பண்ணறே? அவன் செய்யறது சரின்னு சொல்றியா?''

''எந்த வகுப்புக்குமே போக மாட்டேன்கிறானா?''

''இல்லை ப்ரியா. கம்ப்யூட்டர் வகுப்புக்கு கரெக்டா போயிடறான். கராத்தே, பாட்டு கிளாஸ்க்குத்தான் போக மாட்டேங்கிறான்....''

''கம்ப்யூட்டர் சப்ஜெக்ட் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அந்த வகுப்புக்கு ஒழுங்காகப் போறான். விவேக் குரல் எப்படி கரகரன்னு இருக்கு. இந்தக் குரலில் அவன் பாடினால் அவனுக்கும் கஷ்டம்; கேட்கறவங்களுக்கும் கஷ்டம். எதை ஒண்ணையும் கற்றுக் கொள்ள ஆர்வம் இருக்கணும் ஆன்ட்டி.''


''அப்ப நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டு, சாதனை செய்யறாங்களே, அவங்களை என்ன சொல்றே?''

''ஆன்ட்டி, இது போட்டி நிறைந்த உலகம். ஒவ்வொருத்தரும் நிறைய தெரிஞ்சுக்கணும்ங்கிறது அவசியம்தான். அந்த ஆர்வம் இயல்பா வரணும். அப்பதான் அது முழுமையடையும். நீங்க கட்டாயப்படுத்தி சேர்த்தீங்கன்னா, அவன் இப்படித்தான் இருப்பான். அவனுக்கு கம்ப்யூட்டர் தவிர கிரிக்கெட்ல ஆர்வம் இருக்கு. அந்தத் துறையில ஊக்கப்படுத்துங்க. உங்கள் ஆசையை அவன் மேல் திணிக்காதீங்க'' என்றாள் ப்ரியா.

விவேக் ப்ரியாவுக்கு நன்றி கூறினான்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.

- தம்பிப்பயல்



STAR RENDEZVOUS

T.N. SESHAN ANSWERS QUESTIONS FROM CHILDREN

VIEW POINT

WEIGHTY SCHOOL BAGS
WHAT IS THE SOLUTION?



DON'T MISS!

THE CONCLUDING EPISODE OF

'THE GUAVA TREE CAPER'



GOKULAM

The magazine for children

JUNE 2004
Rs.8

CENTRESPREAD POSTER

BRIAN LARA

For Subscriptions mail to :Gokulam, Kalki Buildings,
47 NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097
E-mail:subscription@kalkiweekly.com

நினைவாற்றல் ராஜா!



வாகை சூட வயது தடையில்லை






ஒரு சீட்டுக்கட்டில் 52 சீட்டுகள் இருக்கும். ஐந்து நிமிடம் அந்தச் சீட்டு வரிசையைப் பார்த்துக் கொள்கிறார் சீனிவாசன். அதன் பிறகு சீட்டுக்கட்டை நம்மிடம் கொடுத்து விடுகிறார். தனது நினைவாற்றலில் இருந்து அந்த 52 சீட்டுகளும் என்ன பிரிவு, என்ன நம்பர் என்பதை வரிசையாக, சரியாகச் சொல்கிறார். அதற்கு அவர் எடுத்துக் கொள்ளும் நேரம் இரண்டு நிமிடம்தான். உலக நினைவாற்றல் ஒலிம்பிக் போட்டிகளில் (Memory Sports Olympics) இது போன்ற பத்து ஆட்டங்கள் இருக்கின்றன. ஆனால் மூன்று ஆட்டங்களில் சாதனை படைத்தாலே 'கிராண்ட் மாஸ்டர்' பட்டம் கொடுத்து விடுவார்கள். நம்மிடம் சீனிவாசன் செய்து காட்டிய சீட்டுக்கட்டு நினைவாற்றல் ஆட்டத்தில் உலக சாதனை என்பது ஒரு நிமிடத்தில் வரிசைப் படுத்திச் சொன்னதுதான். ஆசிய அளவில் சீனிவாசன் இரண்டு நிமிடத்தில் சொல்லிக் காட்டி சாதனை செய்திருக்கிறார். இதற்காக லிம்கா சாதனைப் புத்தகத்தில் சீனிவாசன் பெயர் இடம் பெற்றிருக்கிறது. வரும் ஆகஸ்ட்டில் லண்டனில் நடக்க இருக்கும் உலக நினைவாற்றல் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கு கொள்ள தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார் சீனிவாசன்.



"இவனுக்குள் அபார நினைவாற்றல் சக்தி புதைந்து கிடக்கிறது என்பதை அவன் யு.கே.ஜி படிக்கும்போதே கண்டு பிடித்தோம்'' என்கிறார் அப்பா கோபால். இரண்டாம் வகுப்பு படிக்கும் போது அவனைவிட பெரிய சிறுவர்கள் திருக்குறள் 'வாய்மை' அதிகாரத்தை மிக கஷ்டப்பட்டு மனப்பாடம் செய்து கொண்டிருந்தார்கள். சீனிவாசன் அவர்களைப் பார்த்து ''நான் அரை மணியில் பத்து குறளையும் சொல்லிக் காண்பிக்கிறேன்'' என்று படித்து முடித்து சரியாக ஒப்பித்திருக்கிறார். பெற்றோருக்கு ஆச்சர்யம்... 'இந்த நினைவாற்றல்



பாம்புகளிலிருந்து சேகரிக்கப்படும் விஷம் பாகு போன்ற நிற மற்ற, ஒளி புகும் நீர்ம மாகவும், நீரில் கரையக் கூடியதாகவும், கசப்புச் சுவையுடையதாகவும் இருக்கும்.

- எம். அம்சலஷ்மி, சீர்காழி

சக்திக்கு நாம் வேலை கொடுப்போம்' என்று பெற்றோர்கள் முழுப் பரீட்சை விடுமுறையில் 1330 குறளையும் அவரைப் படிக்கச் சொன்னார்கள். இரண்டே வாரத்தில் படித்து முடித்து கட, கடவென ஒப்புவித்தார் சீனிவாசன். இப்பொழுது கீதையின் பதினெட்டு அத்தியாயங்களில் உள்ள 700 ஸ்லோகங்களையும் மனப்பாடமாக சொல்லும் திறமை பெற்றுவிட்டார் சீனிவாசன். ஆங்காங்கு திருக்குறள், கீதை போட்டிகளில் கலந்து கொள்ள நிறைய அழைப்பு வருகிறது.

இவருடைய திறமையைக் கேள்விப்பட்ட காங்கிரஸ் பிரமுகர் இதயதுல்லா, மூப்பனாரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் 'கீதை சொல்லுகிறார்; அடுத்து குரானையும் சொல்லிக் கொடுக்கலாமே' என்று யோசனை தெரிவித்தார். அரபு டீச்சர் ஒருவரிடம் சேர்த்து விட்டனர். அடுத்த சில நாட்களில் குரானின் முக்கியப் பகுதியான யாசீன் சூறாவில் உள்ள 83 வெண்பா பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் திறமை பெற்று விட்டார். கீதை, குரான் ஆகிவிட்டது. அடுத்து பைபிளிலும் தேர்ச்சி பெற்றார். பௌத்த மத நூலான தம்மபதத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 ஸ்லோகங்களை மனப்பாடம் செய்தார். பத்ரகாளி அம்மன் கும்பாபிஷேகத்தை ஒட்டி கொழும்புக்குச் சென்று, ஒரு வாரம் நினைவாற்றல் நிகழ்ச்சிகள் நடத்தி அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தினார், சீனிவாசன்.

இப்போது சீனிவாசனுக்குத் திருக்குறள் தலைகீழ் பாடம். குமரியில் வள்ளுவர் சிலை திறப்பின்போது அப்போதைய முதல்வர் கருணாநிதி முன்பு திருக்குறள் சொல்லி மாதம் 1000 ரூபாய் பெறுகிறார். சீனிவாசன் தனது பெயரையே திருக்குறள் சீனிவாசன் என்று அதிகாரபூர்வமாகவே மாற்றிக் கொண்டுள்ளார். மத்தியப் பிரதேசம் உஜ்ஜயனியில் துணைப் பிரதமர் அத்வானி முன்பு கீதை சொல்லிக் காட்டினார் சீனிவாசன். அவரது ஆற்றலைக் கண்டு வியந்து அத்வானி மத்திய அரசின் வெகுமதியாக 5000 ரூபாய் கொடுத்தார். இவருக்கு 'கீதை மணியோசை', 'கீதை பெருமா முகில்' போன்ற பட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய அமைப்புகளின் சார்பாக குரான் சொல்ல அழைப்பு வருகிறது. திவ்யப் பிரபந்தத்தில் ஆயிரம் பாசுரங்களை, அழகாகச் சொல்கிறார்.

உலக நினைவாற்றல் ஒலிம்பிக்ஸில் சீனிவாசனை சாதனை படைக்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவரைத் தயார் படுத்தி வருகிறார் Academy of excellence என்ற அமைப்பை நடத்தும் ஜே.என். ரெட்டி. இந்த முழுப் பரீட்சை விடுமுறையில் அதற்கான பயிற்சிகளில் கடுமையாக இறங்கியிருக்கிறார் சீனிவாசன். "நினைவாற்றல் சக்தி என்பது இவருக்குப் பிறப்பிலேயே கிடைத்த வரப் பிரசாதம் என்று கருதுகிறோம். நாங்கள் அவருக்கு எந்த மாத்திரையும் இதற்காக கொடுப்பது கிடையாது" என்கிறார் கோபால். எஸ்.எஸ்.எல்.ஸி பரீட்சை எழுதியிருக்கும் சீனிவாசன் மாநிலத்திலேயே முதல் மூன்று இடங்களுக்குள் வருவார் என்று நம்பிக்கையுடன் சொல்கின்றனர் பெற்றோர். இவரது திறமையை அங்கீகரிக்கும் விதமாக ஜெயகோபால் கரோடியா பள்ளி நிர்வாகம் இலவசமாகப் பயிற்றுவிக்கிறது. சீனிவாசன் குறி வைத்திருப்பது ஐ.ஐ.டி படிப்பு. "எம் மதமும் சம்மதம்; மதங்களைத் தாண்டி மனிதர்களை நேசியுங்கள்" என்கிறார் சீனிவாசன்.

- ப்ரியன்

படங்கள்: ராஜன்

காலணி

கதை: சஜ்ஜாத் படம்: சேகர்



பருந்தை விரட்டிய கோழி!



இரையைத் தேடிக் கோழி ஒன்று
நடையைக் கூட்டுது - அதன்
இனிய குஞ்சுக் கூட்டம் பின்னால்
படையைக் கூட்டுது!

பரந்த குப்பை கூளம் கிண்டிப்
பயிற்சி ஊட்டுது - எங்கு
பார்க்கும் இரையைக் குஞ்சுக் கெல்லாம்
பகிர்ந்து ஊட்டுது!

பருந்து ஒன்று தாழ வந்து
வட்டம் போட்டது - நன்கு
பருத்த குஞ்சைத் தூக்கிச் செல்லத்
திட்டம் போட்டது!

பறந்து சென்று கோழி அந்தப்
பருந்தை ஓட்டுது - தாய்ப்
பாசம் என்ப தென்ன வென்று
பலர்க்கும் காட்டுது!

- தளவை இளங்குமரன்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka